
செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-௫௮ தி. வ. ஆண்டு-௨௦௧௫ வைகாசி பரல்-௧

ஜூன் 1984

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

நெறியாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

௧. முனைவர் ச. வே. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎச்.டி.
இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், சென்னை.
௨. முனைவர் தமிழண்ணல், பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.
௩. பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், மொழித்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.
௪. முனைவர் பொன் சௌரிராசன், தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.
௫. முனைவர் பொன் கோதண்டராமன், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.
௬. முனைவர் கு. பரமசிவம், எம். ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.
௭. பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ.
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.
௮. முனைவர் செ. சிங்காரவேலன், எம்.ஏ.,டிப்.லிங்., பிஎச்.டி.,
மயிலாடுதுறை.
௯. கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.
௧0 முனைவர் வி. ப. கா. சுந்தரம், தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

நிறுவனர்: தாமரைச்செல்வர் வ. சுப்பையா.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௫அ திி. வ. ஆண்டு ௨௦கடு, வைகாசி பரல்-கம

சூன் 1984

அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்கு

உலகப் பழம்பெரும் சமயங்களுள் ஒன்றான சைவத்தின் தத்துவப் பிழிவான சைவசித்தாந்தம் பல்வேறு காரணங்களால் புறக்கணிக்கப் பட்டிருந்த சூழ்நிலையில் தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் திருவருட்டிரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் முன்னின்று பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்கைச் சீருடனும் சிறப்புடனும் நடத்தியமை பாராட்டுதற்குரியதாகும். சைவ சித்தாந்தம் இந்திய தத்துவங்களுள் மிகப் பழமை வாய்ந்ததாயிருந்தும் போற்றுவாரில்லாமையாலும் உலகுக்கு எடுத்துக் கூறுவாரில்லாமை யாலும், எடுப்பாரற்ற கைப்பிள்ளை நிலையில் வளராதுபோயிற்று. இந் நிலையில் மகாசந்நிதானம் அவர்கள் அருளால் முதல் கருத்தரங்கம் தமிழ் மக்களிடையே நல்லதொரு புத்துணர்வையும் விழிப்புணர்வை யும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தருமபுரத்தில் மே 11, 12, 13 ஆகிய நாட்களில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கனடா, பிரான்சு, செர்மனி, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை மற்றும் தமிழ்நாடு ஆகிய பல இடங்களிலிருந்து வந்து முந்நூற்றுக்கு மேற்பட்ட அறிஞர்கள் கலந்துகொண்டனர். அறுப துக்கு மேற்பட்ட ஆய்வுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் படிக்கப் பெற்றன. திருப்பனந்தாள், குன்றக்குடி, காஞ்சிபுரம் மகாசந்நி தானங்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். மாண்புமிகு அறநிலைய அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள், சட்டப்பேரவைத்

தலைவர் மாண்புமிகு இராசாராம், அறநிலைய ஆணையர் திரு. கு. ஆளுடையபிள்ளை முதலிய பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினர்.

குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரையில் ஊழ் வினையின் இயல்பை நன்கு விளக்கிக் கூறியது வள்ளுவரின் கருத் துக்கு வளம் சேர்ப்பதாகும்.

கருத்தரங்கைத் துவக்கிவைத்த முன்னாள் உதவிக் குடியரசுத் தலைவர் ஜாட்டி அவர்கள், தெய்வீக சிந்தனையையும் சிறப்பையும் ஆன்மாவைப் பக்குவப்படுத்த வேண்டியதன் இன்றியமையாமை யினையும் நன்கு விளக்கிப் பேசினார்.

''கோயில்களுக்கும் மடங்களுக்கும் வரவேண்டிய வருமானம் முறையாக வர, அரசு வழிவகுத்தால் சத்துணவுத் திட்டம் போன்ற திட்டங்களைக் கோயில்களும் மடங்களுமே சிறப்பாகச் செய்து முடிக்கலாம்'' என்று பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் குறிப் பிட்டது சாலப் பொருத்தமுடைய கருத்தாகும். ஏனெனில் இத்தகைய அறப்பணிகளை அறநிலையங்கள்தாம் மேற்கொள்ள வேண்டும். பல பெரும் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய அரசு இத்தகு அறப்பணிகளில் ஈடுபடுதல் பொதுவாக நல்லதாகத் தோன்றினும் பொருளாதார அடிப்படையில் அவை பல இடர்ப்பாடுகளையும் முறைகேடுகளையும் தோற்றுவிக்க ஏதுவாகும்.

சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகிய, இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) ஆகியவற்றின் தொடர்புபற்றி அமெரிக்க நாட்டு சைவசித்தாந்தத் திருமடத்தின் தலைவராகிய சுவாமி சுப்பிர முனியரின் புதிய விளக்கம் சைவப் பெருமக்களிடையே குழப்பத்தை ஓராண்டுகாலமாக விளைத்து வந்தது. தளை முற்றிலும் நீங்கப்பெற்ற உயிர் இறுதியில் இறையுடன் இரண்டறக் கலந்துவிடும் என்பதால் இறையே உயிர் (நானே பிரம்மம்) என்று கூறி 'வேதாந்த முடிவே சித்தாந்தத்திற்கும்' என்று அவர் கூறிவருகிறார். இதற்கு அடிப் படையாக இறை உயிர்களைப் படைத்தது என்றும் அவர் கூறி வருகிறார்.

சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை இறை வேறு உயிர் வேறு; இறை எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு உயிரும் தொன்மையானது. இரண்டுமே தொடக்கமற்றவை என்ப தாகும். இவ்வடிப்படைக் கொள்கையையே மாற்றி, சைவசித்தாந்தத் திற்குப் புதிய விளக்கம் கூறி அதையும் வேதாந்தத்தின் ஓர் அங்க மாக மாற்ற முயற்சி செய்யும் அமெரிக்க சுவாமிகளின் கருத்தைக்

கருத்தரங்கில் கலந்துகொண்ட அறிஞர் சிலர் சான்றுகள் காட்டி மறுத்தனர். சைவசித்தாந்தம் என்பது தனி நெறி, தனிப்பட்ட தத்துவம் என்று நிலைநாட்டுவதுதான் தமிழர்கட்குப் பெருமை தருவதாகும்.

இப் பணியைத் தருமையில் நடைபெற்ற கருத்தரங்கம் செவ்வையாகச் செய்தது. மேலும் சைவசித்தாந்த உயர் ஆய்வு மையம் ஒன்றையும் தருமை மகாசந்நிதானம் அவர்கள் இருபது இலக்க உருபா பொருட் செலவில் இக் கருத்தரங்கையொட்டித் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டு அறிஞர்களையும் நம்நாட்டு முதிர்ந்த அகவையுடைய அறிஞர்களையும் மகாசந்நிதானம் அவர்கள் பட்டங்களளித்தும் பொன்னுடை போர்த்தியும் பாராட்டியமை வரவேற்கத்தக்கது.

தமிழ் வளர்ச்சிக்குத் தமிழக அரசால் தனிச் செயலராக அமர்த்தப்பெற்றுள்ள டாக்டர் ஔவை நடராசன் அவர்களையும் தருமையாதீன மகாசந்நிதானம் அவர்கள் பொன்னுடை போர்த்தியும் பாராட்டுரை நிகழ்த்தியும் தனியாகச் சிறப்பித்தது ஏற்புடைத்தாகும்.

———

*கவிதை நெஞ்சம்

[செ. ச. செந்திலாண்டவன், எம். ஏ., பி. எட்.,]

பாராளும் தமிழிற்குப் பாங்காய் இந்நாள்,
பல்துறையோர் பாராட்டத் துறையொன் றுக்கி,
சீராளும் நம்முதல்வர், சிறப்பாய்த் தேர்ந்தே,
சிந்தனையின் செயல்வடிவாய்த் தமிழ்த்தாய் பேண,
நாநாளும் நவின்றேத்தும் எங்கள் அன்பின்,
நாவேந்தைச் செயலாளர் ஆகச் செய்த,
சீர்நாளும் மறவாமல், தமிழாம் அன்னை
செவ்வடிகள் மனமாரப் போற்றி நிற்போம்!

உரைவேந்தின் தலைவேந்தாய் முகிழ்த்த செம்மல்!
உணர்வெல்லாம் தமிழூறும் அமுத வள்ளல்!
விரைவான சொற்பெருக்கோ அருவித் துள்ளல்!
வீறுநடை எழுத்துலகோ அறிவின் வெள்ளம்!
நிறைவான பண்பினிலே ஆர்ந்த உள்ளம்!
நீள்புகழின் துறைபோய கவிதை நெஞ்சம்!
பிறைசூடும் பெம்மானின் பெயரைச் சூடி,
பெரும்பதவி பெற்றிருக்கும் பெரியோய் வாழி!

---

* தமிழ்த் துறைச் செயலாளராகப் பதவி ஏற்றிருக்கும் முனைவர் ஔவை து. நடராசன் அவர்களைப் பாராட்டு முகத்தான் வரைந்த வாழ்த்துகள்.

முறைப்பெயர் ஆய்வு

[கழக இலக்கியச் செம்மல், புலவர் இரா. இளங்குமரன்]

(முன் இதழ் ௩௨௪௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாயும் தந்தையுமாம் இருவரும் பெற்ரேர் எனப்படுகின்றனர். கல்வி செல்வம் வீரம் வினையாற்றல் இன்ன பலவற்றை அவர்கள் பெற்றிருந்தாலும், அவற்றைப் பெற்றவர்கள் என்பதற்காக அவர்கள் 'பெற்ரேர்' எனப்படுவதில்லை. மக்களைப் பெற்றதனுலேயே 'பெற்ரேர்' எனப்படுகின்றனர். மக்களைப் பெறுவதைப் 'பேறு' என்பதும், அவர்களைப் பெற்றெடுக்கும் காலத்தைப் 'பேறு காலம்' என்பதும் கருதத் தக்கனவாம்.

> ''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற''

என்ருர் திருவள்ளுவர்.

'பெற்ரேன்' என்பது தந்தையையும், 'பெற்ரேள்' என்பது தாயையும், 'பெற்ரேர்' என்பது இருவரையும் குறித்தல் எவரும் அறிந்ததே இப்பெயர்களை ஆழ்ந்து நோக்கினுல் சில சிக்கல்கள் உண்டாம். ''தாயைப் 'பெற்ரேள்' '' என்பது தகும்; தந்தையைப் 'பெற்ரேன்' என்பது தகுமோ? என்பது முதலாவதாக எழும் சிக்கல். பெறுதல் என்னும் மூலப் பொருளை ஆய்ந்தால் சிக்கல் தீரும்!

ஒருவன் ஒரு பொருளைத் தந்தால், அவன் தந்தவன் ஆகின்ருன். அதனை ஒருவன் பெற்ருல் அவன் பெற்றவன் ஆகின்ருன். உலகியலில் உள்ள தருதல் பெறுதலாம் வழக்கத்தை உன்னித்து உணர்ந்தால் உண்மை புலப்படும். 'தந்தை' என்னும் பெயர்க்கும் 'பெற்ரேள்' என்னும் பெயர்க்கும் உள்ள அடிப்பொருள் தெளிவாம். மகவைத் தந்தவன் 'தந்தை' யானுன்! அதனைப் பெற்றுக் கொண்டவள் 'பெற்ரேள்' ஆனுள்!

ஆனுல், தந்தையைப் பெற்ரேன் என்பது பொருந்தாதோ என்னும் ஐயம் எழும். முந்தை இலக்கண முறையை அறிந்தவர் ஐயுருர்; இலக்கியச் சான்று கண்டு மகிழ்வர்.

தலைவி ஒருத்தியைத் தலைவனிடம் ஒப்படைக்கும் மங்கல விழா 'மகட்கொடை' எனப் பண்டு வழங்கப்பட்டது. கொடுப்போரும்

அடுப்போரும் இருந்து மகட்கொடை நிகழ்த்திய நிகழ்வையும், கொடுப்போர் இன்றி அயலாரே கொடைநேர்ந்து உதவிய நிகழ்வையும் இலக்கண இலக்கியங்கள் விரிந்த அளவில் சுட்டுகின்றன. மகட்கொடையை ஏற்பவன் என்ன பெயர் பெறுவான். 'பெற்றோன்' ஆவன் அல்லனோ? ஆதலால், தலைவி யொருத்தி 'பெற்றோள்' என்னும் பேற்றைப் பெறுமுன் தலைவனே, அத் தலைவியைப் பெற்றுக் கொள்ளுதலால் 'பெற்றோன்' என்னும் பேறு பெற்றுவிட்டான் என்க. இதனை விளக்குமுகத்தான்.

''பெற்றோன் பெட்கும் பிணையை ஆகு'' (அகம். 86)

என்று மங்கல மகளிர் மணவிழாவில் வாழ்த்தும் திறத்தை அகப் பாட்டுக் கூறுகின்றது. ஆகலின் தலைவியைப் பெற்றமையால் தலைவன் பெற்றோனுதலும், அத் தலைவன் தருதலால் மகவைப் பெறும் தலைவி பெற்றோள் ஆதலும், இருவரும் இக் கரணியங்களால் இணைந்து பெற்றோர் ஆதலும் விளக்கமாம். மேலும் ஒரு கருத்தும் இணைத்து நோக்கத் தக்கதாம். தாய், மகவை ஈன்று புறந்தரு கின்றாள். அதனைப் பெற்றுப் பெரு நிலைப்படுத்துதலில் தந்தையின் பங்கு முதன்மையுடையதாய் முந்து இருந்தது, இதனை,

''வீறுசால்புதல்வற் பெற்றனை இவணர்க்கு''

எனவரும் பதிற்றுப்பத்து விளக்கும் (74) ''தந்தையோடு கல்வி போம்'' என்பதும் சுட்டும். கணவனுக்குக் 'கொண்டான்' என்னும் பெயருண்மையும், ''கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி'' என்னும் பாட்டுண்மையும் இதனை மேலும் விளக்கும்.

பெற்றோன், பெற்றோள் என்பவை அடிப்படைப் பொருள் கருதாமல் தந்தை, தாய் என்னும் பொருளில் வழங்கலான பின்னர், ஈன்றோன், ஈன்றோள் என்பவை ஈனுதல் நிலையாலும், பயந்தோன், பயந்தோள் என்பவை மக்களின் பயன்பாட்டு நிலையாலும் வழக்கில் ஊன்றினவாம்.

ஈன்ற பொழுதினும் சான்றோன் எனக் கேட்டபொழுது ஈன்றுருக்கு இன்பந்தருதலைப் பழ நூல்கள் பலவும் பாரித்துரைக்கும். 'ஈனில் இழைத்து' (முட்டை இட்டுக் குஞ்சு பொறித்தற்காகக் கூடு அமைத்து) இன்புறும் பறவையை அகப்பாட்டுத் தெரிவிக்கும். ''கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்ததை'' மதுரைக் காஞ்சி தெளி விக்கும். ஆகலின் காலமுறையால் தலைவன் தலைவியர் முதற்கண் பெற்றோர் ஆதலும், பின்னர் ஈன்றோர் ஆதலும், நிறைவில் 'பயந் தோர்' ஆதலும் முறையாய் விளங்கும். இம் முப்பெயர்க்குப் பின்னே குறைவிலா நிறை பெயராய் வருவது 'குரவர்' என்னும்

பெயராம். குரவராவார் உள்ளொளி வாய்ந்த ஒள்ளியர் என்க. இனிப், பெற்றோரைக் 'குரவர்' என்பதும், முதுகுரவர் என்பதும் இருமுது குரவர் என்பதும் புதுவதன்று; பழைய வழக்காறேயாம். இவற்றுள் முன்னை இரண்டும், பெற்றோர் எனத் 'தாய் தந்தை' அளவில் நிற்கப் பின்னைவரும் 'இருமுதுகுரவர்' என்பதோ தலைவன் தலைவியர் ஆகிய இருபால் குடும்பத்து இருபெரும் பெற்றோர்களையும் சுட்டும் சீர்மையது என்பதை எண்ணின் இனிக்தம் செய்தியாம். ''இருமுதுகுரவர், ஏவலும் பிழைத்தேன்'' என்பது கண்ணகி முன்னர்க் கோவலன் கலங்கியும் கனிந்தும், கண்ணீர் வார்ந்துமுரைக்கும் உரை என்பதைக் கருதலும் தகும்! ஆதலின் பயந்தோரினும் உயர்முதுநிலை குரவர்நிலை என்பதைக் கொள்ளுதல் ஏற்புடையதாம்.

தலைவன்—தலைவி; கிழவன்—கிழத்தி; என்பவை திருமணத்திற்கு முன்பு சுட்டப் பெறும் பெயர்கள். மணமகன் மணமகள் எனவும், பின்னர்த் திருமணத்தின் போழ்தில், கணவன் மனைவி எனவும், துணைவன் துணைவி எனவும் ஆளன் ஆட்டி எனவும் வழங்கப் பெற்றனர். இவையெல்லாம் பெற்றோர் என்னும் பெரு நிலை எய்துதற்கு முன்னுனவை. ஆனல். பெற்றோர் முதலாகச் சுட்டப் பெற்றவையோ மகப்பேறு தொட்டுப் பின்னே வருபவையாம்.

இன்னும் ஒரு குறிப்பை இவண் நோக்குதல் நலமாம். மகப்பேற்றின் முன்னர்த் தலைவன் தலைவி கணவன் மனைவி எனத் தலைவனுக்கு முதன்மையும், மகப்பேற்றின் பின்னர்த் தாய் தந்தை, அம்மையப்பன் எனத் தலைவிக்கு முதன்மையும் வழங்குதல் மரபாகக் கொள்ளப்பெறுதல் என்பதாம். இப் பேறு 'குலம் தருதல்' என்பதால் மகளிர்க்கு வாய்த்ததாம். ''குலம் தருதலாவது, புதல்வற் பயந்து மேலும் குலத்தை வளர்த்தல்'' என்பதாம். (சீவக. 2141 நச்.)

(தொடரும்.)

வருத்துதந்தோ !

சீருயரும் சுசிந்திரத் திருவூர்ப் பாங்கர்
　　திகழும் ஆசிராமப் பதியைச் சார்ந்தோன்
பாரதனன் றுடெங்கும் சீர்த்தி பெற்றோன்
　　பைந்தமிழில் பொருளியலைத் தந்த மேலோன்
மாரியென மக்கட்கு உதவி செய்தோன்
　　மாநிலத்துப் பொருளியலை வகுத்த சீலன்
பேர்பரவும் பா நடரா சன்ருன் இன்று
　　பிரிந்துவிட்ட செய்திநமை வருத்து தந்தோ !

—நாஞ்சில், கா. கணபதி.

மணிவிழாக் கொண்ட மாண்பினர் வாழ்க !

பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழி நின்று, நாடு, மொழி, மக்கள் நலம், சீர்திருத்தம் இவற்றில் இடையருது பற்றுக்கொண்டு, பள்ளிப் பருவத்திலிருந்தே பொது வாழ்க்கையில் நாட்டமும் அரசியலில் ஈடுபாடும் கொண்டு, அதனால் சொல் லொண்ணா எதிர்ப்புகட்கும், சிறை ஒறுப்புகட்கும் ஆளாகி,

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"

என்னும் குறளுரைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து, மக்களின் பேராதரவைப் படிப்படியாகப் பெற்றுத் தமது வாழ்நாளில் அறுபது ஆண்டுகளைக் கடந்து, அறுபத் தோராம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் மணிவிழா 3-6-84இல், சிறப்பாகச் சென்னை மாநகரிலும் பொதுவாகத் தமிழகமெங்கும் சீருஞ் சிறப்புமாகக் கொண்டாடப்பெற்றது.



இவ் விழாவில் பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், வடநாட்டுத் தலைவர்கள் சிலரும் பங்குகொண்டு கலைஞரவர்களைப் பாராட்டியுள்ளார்கள். அவரெல்லாம் தம் கருத்து வேறுபாடுகட்கு அப்பால் நின்று வாழ்த்துகிருர்கள் என்ருல் கலைஞரின் சலியாத உழைப்பு, அறிவு, ஆற்றல்கள், பொதுநலத் தொண்டு இவைபற்றியே யன்றி வேறில்லை. அவ் வகையில் நாமும் நடுநிலை நின்று திரு. கலைஞர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

அன்றியும், தமிழ்மொழி - தமிழ்நாடு - தமிழின முன்னேற்றம் ஆகியவற்றில் நம் கழகம் கொண்டிருக்கும் குறிக்கோள்கட்குக் கலைஞரின் தொண்டும் உறுதுணையாக நின்றது, நிற்கும் என்றும்

நாம் நம்புகின்றேம். அதற்கேற்பவே கலைஞரவர்களும் தம் ஆட்சிக் காலத்தில் கழகப் பணிகட்கெல்லாம் உறுதுணை நின்றதோடு, மேனாள் கழக ஆட்சியர் தாமரைச் செல்வர் வ. சு. அவர்களிடம் பற்றும் பாசமும் கொண்டிருந்தாரெனில் அது மிகையன்று. வ. சு. அவர்களின் பவள விழாவில் கலந்துகொண்டு கலைஞர் அவர்கள் ஆற்றிய உரைகளே இதற்குச் சான்று பகரும்.

சாதாரண எழுத்தாளராக மட்டுமின்றி, பேச்சாளராக, கதாசிரியராக, கவிஞராக, இதழாசிரியராக, இலக்கிய ஆசிரியராக, சிலவேளைகளில் நடிகராக, அதே நேரத்தில் முழுநேர அரசியல் வாதியாகச் சுழன்று சுழன்று பணியாற்றிடும் கலைஞரவர்களின் திறமைகளை எண்ணி ''இவர் எப்படித்தான் இவ்வளவு பணிகளையும் செய்கின்றரோ! இம் மனிதர்க்கு உறக்கமென்பதே இராதோ - பெருஞ் சூராராகவன்றே இருக்கின்றர்'' என்று மேனாள் கழக ஆட்சியர் அடிக்கடி தம் நண்பர்களுடன் உரையாடும்போது வியந்து பாராட்டியதை நாம் பலகால் கேட்டிருக்கின்றேம், கரணியம், எங்ஙனம் அரசியலில் கலைஞர் பேருழைப்பாளராகத் திகழ்கின்றரோ அங்ஙனமே பதிப்புத்துறையில் ஒரு கலைஞராகத் திகழ்ந்தவர் நம் வ. சு. அவர்கள்.

பொதுவாக அரசியலில் ஈடுபாடுடையோர், எழுத்துத் துறையில் அதிலும் கலைத்துறையில் ஈடுபாடுகொள்ளுதல் மிக அரிது. ஆனல் நம் கலைஞரவர்களோ, தம்முடைய பேச்சும் மூச்சும் கலையாகவே கொண்டவர். பேச்சுகளில் அவர் எடுத்தாளும் உவமைகள் இலக்கிய மேற்கோள்கள் யாரும் வியந்து பாராட்டத்தக்கவை. புலவர் உலகில் மட்டுமே நடமாடும் இலக்கியங்களைப் பொது மேடைக்குக் கொணர்ந்து பாமர மக்களும் அவற்றைச் சுவைத்து இன்புறச் செய்பவர் கலைஞர். இவரது கலைவுணர்வுக்கு எடுத்துக் காட்டுகளாகத் திகழ்பவை சென்னை வள்ளுவர் கோட்டம், பூம்புகார் அமைப்பு, கட்டமொம்மன் கோட்டை அமைப்பு இன்னபிறவாகும்.

கலைஞரவர்களின் மொழிப்பற்று பற்றி யாம் அதிகம் கூறத் தேவையில்லை. இந்தி எதிர்ப்பியக்கத்தில் அவர்கொண்ட ஈடுபாடும், அதனல்பட்ட இடர்ப்பாடுகளும் நாடறிந்தவை அரசியலில் இவர்க்குள்ள பட்டறிவு, செய்தியாளர்கட்கு உடனுக்குடன் இவர் தரும் விடைகளின் பாங்கு, எதை எப்படி எப்போது செய்யவேண்டும் என்பதறிந்து செயல்படும் திறம். கலைஞரெனப் போற்றப்பட்டாலும் உள்ளத்தால் புரட்சி வீரராகத் திகழும் இயல்பு, 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப' மொழியும் சொல்லாற்றல். ஆட்சியிலிருந்தபோது மக்கள் நலங்கருதி வளர்ச்சித் திட்டங்கள் பல தீட்டிய திறமை, ஆகிய இத்தனையும் இவர்தம் ஆற்றல்கட்கு எடுத்

துக்காட்டுகளாகும். மேலும் விரிக்கின் பெருகும் என்பதால் இத்துடன் விடுக்கின்றோம். சுருங்கச் சொல்லவேண்டுமானால் பெரியாரின் துணிவு, அறிஞர் அண்ணாவின் அறிவு, காமராசரின் தொண்டு, இராசாசியின் அரசியல் சூழ்ச்சி இத்துணையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஒரு தலைவர் கலைஞரெனில் அது மிகையன்று.

இத்தகு காரணியங்களால் தாம் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் இவரைத் தமிழினக் காவலர் எனப் போற்றுகின்றனர். தமிழகத்தின் இளைய குமுகாயமும் இவரையே தம் வழிகாட்டியாகக் கொள்கின்றது. அதற்கேற்ப இளைஞருலகிற்கு இவர் ஒரு நம்பிக்கை விண்மீனாகத் திகழ்ந்து, கடமையினைச் செய்து, கண்ணியம்போற்றி, கட்டுப்பாடு காத்து வருகின்றார்.

எனவே, இத்தகைய ஓர் அரசியல் - மொழியியல் - இனவியல் தலைவரை மற்றவர்களைப்போல் நாமும் பாராட்டி மகிழ்கிறோம். கழகத்தின் சார்பிலும், செந்தமிழ்ச் செல்வியின் சார்பிலும், மணிவிழாக்கொண்ட மாண்பினர் வாழ்க என உளமார வாழ்த்துகிறோம்.

———

வாழ்த்துகின்றோம்

கலையுலகில் வாழ்ந்திடினும்
கருத்தினிலே புரட்சிவீரர்
நிலைகுலையா நெஞ்சிற்கோர்
நீதியினை வழங்கும்சீலர்
அலையலையாய் வருந்துயர்கள்
அவரடியில் வீழ்ந்துசோரும்
தலைகொடுத்தும் தமிழ்காக்கத்
தயங்காது அவரின்நெஞ்சம்
உலைக்களமாம் அவருளத்தில்
உயர்பணிகள் உருவாகும்
சிலைவடிக்கும் சிற்பியெனச்
சிந்தனையின் உருவமவர்
கலைஞரவர் வாழ்கவெனக்
கருத்திருத்தி வாழ்த்துகின்றோம்

—த. சி. வே.

பயன்மிக்க, பழைய சில பட்டிமண்டப நிகழ்ச்சிகள்

[ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.]

(முன் இதழ் ௩௱௪ ஆம் பக்கத் தொடர்ச்சி)

(3) ஞானநலங்கள் :

சிவத்திரு சோமசுந்தர நாயகர் அவர்கள் (1846—1901), தமிழகத்தில் அண்மைக் காலத்தில் விளங்கியிருந்த பேரறிஞர்களில் ஒருவர். 'சைவசித்தாந்த சண்டமாருதம்' என்னும் சிறப்பியற்பெயர் பெற்றிருந்த அவர்கள், சைவசமயத்திற்கு ஆற்றிய அரும்பெரும் தொண்டுகள் அளவிடற்பாலன அல்ல. அவர்கள் எத்தனையோ பலப்பல அரிய பெரிய சமய ஆராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவர் எழுதிய பலப்பல நூல்களுள், "ஆசார்யப் பிரபாவம்" என்பதும் ஒன்று. அது திருஞானசம்பந்தரைப்பற்றியது. அந்நூல் ஒன்றே, அவர்தம் அளப்பரும் புலமை மாட்சிமையினை விளக்கப் போதியதாகும். அதன்கண் திருஞானசம்பந்தர் சீர்காழியில் பிரமதீர்த்தக்கரையில், அம்மையப்பரால் பாலூட்டப்பெற்ற நிலையில் எய்திய ஞானத்தின் திறங்களை,

> "சிவனடியே சிந்திக்கும்
> திருப்பெருகு சிவஞானம்
> பவமதனை அறமாற்றும்
> பாங்கினில்ஓங் கியஞானம்,
> உவமையிலாக் கலைஞானம்,
> உணர்வரிய மெய்ஞ்ஞானம்,
> தவமுதல்வர் சம்பந்தர்
> தாம்உணர்ந்தார் அந்நிலையில்"

என்று, தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்துள்ளார். அந்தப் பெரியபுராணப் பாடலுக்கு நாயகர் அவர்கள் விரிவான முறையில் விளக்கங்கள் எழுதியிருந்தார். அதன்கண், ஞானம் நான்கு வகைப்படும் என்று அவர் விளக்கியிருந்தார். அதனை மறுத்து ஞானம் இரண்டேயன்றி நான்கு அன்று என்று, பரிதிமாற் கலைஞரின் ஆசிரியராகிய மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியார் அவர்கள், ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இவ் விவாதத்தில் காசிவாசி செந்தில்நாதையர், யாழ்ப்பாணம்

சபாபதிநாவலர், மயிலைத் தணிகாசல முதலியார், வல்லை சண்முக சுந்தர முதலியார், முதலிய பேரறிஞர்கள் பலர் கலந்துகொண்டு, ஒருவரையொருவர் மறுத்து எதிர் வழக்கிட்டு நின்றனர்.

எட்மண்ட் பர்க் (Edmund Burke), தம்மை ஏளனம் செய்து இகழ்ந்ததனால், 'எதிர்த்தாக்கு' (Retaliation) என்னும் கவிதை இயற்றி, ஆலிவர் கோல்டுஸ்மித் (Oliver Goldsmith) அவரை ஏளனம் செய்து பாடியதுபோல, நாயகர் அவர்களும்,

"ஏழை நாவலர்கள் பேசுவர் ஞானம்
இரண்டென; நான்கவை என்றே
இசைத்தனர் சேக்கிழார்; அதற்கு இயம்ப
எண்ணில வாம்பிர மாணம்
ஈழ நாவலர்கள் அறிவரோ? அறியார்;
எழில்கொளும் சித்தியார், தீபம்
என்னும் மெய்ந்நூலும் உரைக்குமே, ஞானம்
ஈர்இரண்டே என; இதற்கு அப்
பீழை நாவலர்கள் பேசுவது என்கொல்?
பிதற்றுவார் பொருள்கெட; அதனால்
பிச்சராம் அவர்தம் பேச்சு உளங்கொண்டு,
பேதுறுவேம் அலேம்! எந்தாய்!
கோழை நாவலர்கள் காணரும் ஞானக்
குன்றமே! மன்றில்வாழ் வுடையான்,
குருஎன வந்த ஞானசம் பந்தக்
கோமளமே! அருட் குணமே!"

—சோமசுந்தர நாயகர்.

என்பன போன்ற, பலப்பல அழகிய இனிய பாடல்கள் நாயகர் அவர்களால் பாடப்பெற்றுள்ளன. 'விவாத இலக்கியங்கள்' (Polemics) என்பனவற்றில், இத்தகைய அழகிய இனிய பாடல்களும், மறுப்புரை நூல்களும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வனவாகும். 'உத்தமவாத தூலவாதூலம்' என்னும் மறுப்பியல் நூல் ஒன்றும், சுமார் நானூறு (400) வெண்பாக்கள் கொண்டதாய், நாயகர் அவர்களால் அழகுற இயற்றப்பெற்றுள்ளது. அந்நூலைப் பயில்வோர் 'வெண்பாவிற் புகழேந்தி' மட்டுமேயல்லர்; நாயகரும் அதிற் சிறந்தவர் என்பதனை உணர்வர். நிற்க.

'திருஞானசம்பந்தர் பெற்ற ஞானம் நான்கா? இரண்டா?' என்று நிகழ்ந்த இவ் விவாதத்தின் தொடர்பாக, ஞானசூடாமணி—ஞானபேதவிளக்கச் சூறுவளி—ஞானபேதத் தெளிவு—ஞானபேதத்

துணிவு—ஞான சதுட்டய தற்பணம்—ஞானபேத விளக்க நியாய ரட்சாமணி முதலிய பலப்பல நூல்கள், நாயகர் அவர்களால் எழுதப் பெற்றன. இவற்றிற்கு எதிராக வேறு பற்பல மறுப்புரைகளும் பலரால் எழுதப்பெற்று வெளிவந்துள்ளன. இங்ஙனம் ஒரு பாடலைக் குறித்தே, தனித்தனியே பல நூல்கள் எழுதும் அளவிற்குப் பெரும் புலமை வாய்ந்திருந்த பேரறிஞர்கள் பலர், அண்மைக்காலம் வரையில் விளங்கியிருந்தனர் என்பது, நம்மனோர் நினைந்து மகிழ்தற் குரியது. மேற்குறித்த பெரியபுராணப் பாடல் நிலைபெற்றிருக்கும் வரையில், அதன் தொடர்பாக வெளிவந்த மறுப்பியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கருத்துகளும், பொருள் நுணுக்கங்களும், அறிஞர்கள் ஆராய்ந்து அறிதற்குரியனவாகத் திகழும்.

(4) தென்புலத்தார் :

தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறளின் கண் வரும் ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு, ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' என்னும் திருக்குறளை, யாவரும் நன்கறிவர். இதன்கண் வரும் 'தென்புலத்தார்' என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர் ''தென்புலத்தார்—பிதிரர்; பிதிரராவார், படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி; அவர்க்கு இடம் தென்திசையாதலின்'', 'தென்புலத்தார்' என்றார் என்று விளக்கம் எழுதினார். அதனைத் தழுவி, 1931ஆம் ஆண்டில் நிகழ்ந்த, சென்னைப் பல்லவபுரம் பொதுநிலைக் கழகத்தின் 20ஆம் ஆண்டுவிழாப் பேரவையில், 'திருக்குறள் விளக்கம்' திரு. குப்புசாமி முதலியார் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

அவர்தம் கருத்தை மறுத்துத் ''தென்புலம் வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும் பொன்போற் புதல்வர்ப் பெறுஅதீரும்'' எனவரும் புறநானூற்று வரிகளுக்குத் ''தென்திசைக்கண் வாழ்வோராகிய நின் குடியில் இறந்தோர்'' என்று, புறநானூற்று உரையாசிரியர் எழுதி யிருப்பதனைச் சுட்டிக்காட்டி, அறிஞர்கள் சிலர் வினா எழுப்பினர். விவாதத்தில் அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு, உரை நிகழ்த்தினர். இதனால் அறிஞர்களிடையே ஒருபெரும் கருத்துப் பூசல் நிகழ்ந்தது. அந்நிலையில் அவ்வறிஞர் பெருமக்கள் பலரின் ஒருமித்த வேண்டு கோளுக்கு இணங்கி, அதன் உண்மைப்பொருள் இது என்பது தெளி வுறுத்தி விளக்கும் முறையில், ஆசிரியர் மறைமலை அடிகளார் "தென்புலத்தார் யார் ?" என்னும் தலைப்பில் அரியதொரு நூல் எழுதி வெளியிட்டார்.

அந்நூல் அளவாற் சிறியதாயினும், பொருளின் சிறப்பால் பெருமாண்புடையது. அடிகளாரின், தமிழ் வடமொழி ஆங்கிலம்

ஆகிய மும்மொழிப் புலமையும், ஆராய்ச்சித் திறனும், அதன்கண் செம்மையுற விளங்கித் திகழ்கின்றன. இருக்குவேதம் (6—9—10 ஆம் மண்டிலங்கள்), சதபத பிராம்மணம் (6—12—13 ஆம் கண்டங்கள்), அரிவம்சம், வாயுபுராணம், மனுமிருதி முதலிய பல வடமொழி நூல்களும், (Prof. Max Muller, Dr, A. B. Keith, Prof. Rhys David, Dr. Robert Caldwell), சுவாமி தயானந்தர் (சத்தியார்த்தப் பிரகாசிகை) ஆகிய பேரறிஞர்கள் பலர் எழுதிய ஆராய்ச்சி நூல்களும், இதன்கண் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. ''தென்புலத்தார் தெய்வம்'' எனத் தொடங்கும் திருக்குறள் இருக்கும் வரையில், இந்நூலின் ஆய்வுக் கருத்துகளும் நிலைபெற்று விளங்கிப் பயன்படும் என்பது உறுதி.

(5) சோமசுந்தரக் காஞ்சி:

ஆசிரியர் மறைமலை அடிகளார், தம்முடைய ஞானாசிரியராகிய சோமசுந்தர நாயகர் அவர்கள் மறைந்தபொழுது (1901), ''சோமசுந்தரக் காஞ்சி'' என்னும் தலைப்பில், நிலையாமைபற்றிக் கூறும் புறப்பொருட் காஞ்சித் திணையில் கையறுநிலை என்னும் துறையில், ஓர் இரங்கற் கவிதைநூல் (Elegy) இயற்றி வெளியிட்டார். அதன்கண்,

''சைவம் எனப்படு சமய நல்உண்மை
தழைந்து செழித்திடவோ?
தாவறுநீதி வழிப்படு வாதிகள்
சார்ந்து கழித்திடவோ?
மெய்வழி பொய்வழி வேறு வேருக
விரிந்து விளங்கிடவோ?
வேத வேதாந்த வரம்புஇனி யார்க்கும்
விளங்க விளம்பிடவோ?
தெய்வம் இனிச் சிவம் என்று
தெளிந்து உலகு இங்கு தெளிந்திடவோ?
திப்பிய மெய்யருள் இப்புவி வந்து
சிறந்த திறம் படவோ?
துய்ய வெண்ணீறு துதைந்த தொழும்பர்கள்
தன்மை சுடர்ந் திடவோ?
சோமசுந்தர நாமமொடு,
தோன்றினை நீ எம்குருவே''

என்பன போன்ற பல பாடல்கள், நலஞ்சிறந்த சங்க இலக்கிய நடையில், செந்தமிழ்ச் சந்த நலங்கள் செறிந்து, அழகுற அமைந்து திகழ்கின்றன.

மான வடசொற்கள் வந்து புகுவதற்கு வழிவகுத்துள்ளார். அதனைப் பின்பற்றியே வீரசோழியம், பிரயோக விவேகம் முதலிய பிற்காலத் தமிழ் இலக்கண நூல்கள், தமிழில் வடமொழிக்கு ஆதிக்கம் ஏற்படுத்தும் வகையில் தோன்றலாயின. 'இலக்கணக் கொத்துரை' இயற்றிய சுவாமிநாத தேசிகர்,

'அன்றியும் தமிழ்நூற்கு அளவிலை; அவற்றுள்
ஒன்றே ஆயினும் தனித்தமிழ் உண்டோ?'

என்று, நாம் யாது கூறுகின்றோம் என்று ஒருசிறிதும் எண்ணிப் பாராமலே, தமிழின் தனிப்பெருந் தெய்வநல மாட்சிமைக்கும் குறை தோன்றப் பழிகூறிச் சென்றவராதலின், அவர் நன்னூல்பற்றிப் புகழ்ந்து கூறியதும், அத்தகையதொன்றே என்று புறககணிக்கற் பாலதேயாகும். ஆதலின், நன்னூலாயினும், வேறு பிற எந் நூலாயினும், தொல்காப்பிய நூலுக்கு ஒருசிறிதும் ஈடாகமாட்டா'' என்று அடிகளார் வலியுறுத்தியுள்ளார். இக் கருத்துகளெல்லாம் தமிழறிஞர்களுக்குப் புத்தொளியும், புதுநெறியும் காட்டி நிலை பெற்றுப் பெரிதும் பயன்படுவனவாகும்.

(தொடரும்)

— — —


அந்தப் பெருந்தன்மையை நினைத்துப் பெருமைப்படுகிறேன்

இந்தி புகுத்தப்பட்ட நேரத்தில், வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தாலும், இராசா சர் முத்தையா செட்டியாரவர்கள் சென்னையிலுள்ள தங்கசாலையிலிருந்து, தீவுத்திடல்வரை தமிழ்க் கொடியைத் தோளில் சுமந்துகொண்டு நடந்தார்.

அந்தத் தமிழ் இயக்கம் படிப்படியாக வளர்ந்து நாட்டை ஆள்கிற கட்சியாக வளர்ந்திருக்கிறது. அன்று கொடி தூக்கியவர் என்ற முறையில் இப்போது பங்கு கேட்காத பண்பை—பெருந்தன்மையை நான் நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

பேரறிஞர் அண்ணா

(அண்ணாவின் சிந்தனைச் செல்வம், பக். 127)



தோற்றம் :
8—5—1905

மறைவு :
12—5—1984

பெருந்தன்மைக்கு ஒரு பேரரசர்

இராசா சர் அண்ணுமலை செட்டியாரின் திருமகனுராகப் பிறந்து, கல்வி, கைத்தொழில், வணிகம், இசை, அரசியல் ஆகிய துறைகளில் செயற்கரிய பெரும் பணிகள் பல ஆற்றி 78 ஆண்டுகள் வாழ்ந்து வரலாற்றில் தமக்கென ஓர் இடத்தைப் பெற்ற வர் இராசா சர் முத்தைய செட்டியாரவர்களாவார்.

இற்றைக்கு ஏறத்தாழ அறுபது ஆண்டுகட்கு முன்னர் தமிழகத தில் இயங்கிவந்த பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக் கழகம் ஒன்றேயாகும். அதுவும் தனித்தமிழ் நாட்டிற்கு மட்டும் உரியதாக இயங்கவில்லை. அத்தகைய நிலையில் இராசா சர் அண்ணுமலை செட்டியார் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார். அதனைக் கண்போல் காத்து வளர்த்து வந்தவர் நம் முத்தைய செட்டியார்.

பொதுவாகப் பல்கலைக் கழகங்கள் என்ருல் அவற்றில் ஆங்கில மொழியின் செல்வாக்குதான் பெரிதாக இருக்கும். ஆனுல், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தமிழுக்குப் புத்துயிர் அளித்து, அஃது ஆங்கிலத்திற்கு ஒப்ப எல்லாத் துறைகளிலும் சீரும் சிறப்பும் பெற வாய்ப்பளிததது.

திரு. முத்தைய செட்டியாரவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இயற்றமிழ்க்கென ஒரு துறையினை நிறுவியதோடு மொழியியல் அறிவு வளர்ச்சிக்கென மொழியியல் துறை (Linguistic) ஒன்றினையும் நிறுவிய பெருமைக்குரியவராவார். அதுமட்டுமன்றி, இவர்கள் தமிழ்மொழியின் வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும் ஈடுபாடு கொண்டு நீங்காத பற்றுக் கொண்டிருந்தார் என்பதற்கு நிறைய எடுத்துக்காட்டுகள் உள.

தமிழ்நாட்டில் இந்தி மொழி கட்டாயமாகத் திணிக்கப்பட்ட காலத்தில் அதனை எதிர்த்து ஒரு பெரும் போராட்டம் நடந்தபோது, அதில் நம் முத்தைய செட்டியாரவர்கள் கொண்ட ஈடுபாடு மறக்க முடியாத ஒன்று. அவர் ஒரு பெரும் செல்வராக இருந்தபோதிலும் இந்தியை எதிர்த்து, சாதாரண மக்களைப்போல் கொடிபிடித்து சென்னை நகர வீதிகளிலே நடை போட்டு வந்த எளிமைக் காட்சி, பேரறிஞர் அண்ணு அவர்களாலேயே போற்றிப் புகழப்பட்ட தென்ருல் இவரது தாய்மொழிப் பற்றுக்கு வேறென்ன எடுத்துக் காட்டுத் தேவை ?

நம் கழக விழாக்களில் பங்குகொண்டு பேசியபோதெல்லாம், ''ஒய்வு பெற்ற தமிழ்ப் புலவர்கள், தமக்கு வேலையில்லையே என்று

கவலைப்படத் தேவையில்லை; அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்தால், அவர்தம் ஆற்றலைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களைப் போற்றிப் புரக்கப் பல்கலைக் கழகம் காத்துக்கொண்டிருக்கிறது'' என்று கூறியது நாமெல்லாம் நினைந்து மகிழ்ந்து பாராட்ட வேண்டிய பெருந்தன்மையாகும்.

ஆங்கில இலக்கியங்களைப் படித்தவர்தாம் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற முடியும் என்றிருந்த காலம் ஒன்றுண்டு. ஆனால் தமிழ் இலக்கியத்தை ஆராய்ந்து ஆராய்ச்சிக் கட்டுரை எழுதித் தமிழ்ப் புலவர்களும் முனைவர் பட்டம் பெறலாம் என்று ஆங்கிலக் கல்விக்கு ஒப்பான பெருமையை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின்மூலம் ஏற்படுத்திய பெருமை திரு. முத்தைய செட்டியார் அவர்களையே சாரும்.

தமிழ் நாட்டில் தமிழிசைக்குப் பெருமை இல்லை. இசையரங்கு என்றால் ''தியாகராசர் கீர்த்தனைகளைப் பாடும் இடம்'' என்றிருந்த நிலையினை மாற்றித் தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி, திருப்புகழ், பாரதியார் பாடல், பாரதிதாசன் பாடல், கோபால கிருட்டிண பாரதி பாடல், சித்தர் பாடல்கள் எல்லாம் பாடி, இசையரங்குகளில் தமிழ் இசை முழங்க வைத்து அதனை நாடெங்கும் பரப்பிய பெருமை இவருக்கே உண்டு. இவை அனைத்துக்கும் அப்பாற்பட்டு திரு செட்டியாரவர்களிடம் பல நற்பண்புகள் காணப்பட்டன. இவர் ஓர் அரசர் என்று சொல்லுமளவிற்கு வளமும் வாழ்வும் பெற்றவராயினும், காட்சிக் கெளியர், கடுஞ்சொல் கூறாதவர். தமிழ்ப் புலவர்கள், பேராசிரியர்கள் என்போர் யார் வேண்டுமாயினும் எப்போது வேண்டுமாயினும் இவர்களைக் கண்டு உரையாடலாம், தம் குறைகளைக் கூறலாம். அவற்றுக்குச் செவி சாய்த்து ஆவன செய்வதும், ஆவன செய்வதாகக் கூறும் எளிமையும் செட்டிநாட்டரசர் அவர்களிடத்தில் காணப்பட்ட சீரிய பண்புகளாகும்.

இத்தகைய நல்லாரின் மறைவோடு பெருந்தன்மையும் மறைவுற்றது எனில் அது மிகையன்று. திரு. செட்டியாரவர்கள் மேனாள் கழக ஆட்சியாளரிடம் பேரன்பும் பற்றும் கொண்டவர். கழக விழாக்களில் கலந்துகொள்வதிலே இவருக்கொரு தனி ஆர்வம் உண்டு. தமிழ் தொடர்பான எந்த விழாவிலும் அரசர் அவர்கள் கழகத்தின் பணியைப்பற்றியும் முன்னாள் ஆட்சியாளர் அவர்களைப் பற்றியும் பாராட்டிப் பேசத் தவற மாட்டார்கள். ஒரு முறை சட்டப் பேரவையிலேயே கழகத்தின் பணியைப் பாராட்டிப் பேசினார்கள்.

இங்ஙனம் பெருந்தன்மைக்கு ஒரு பேரரசராக வாழ்ந்த திரு முத்தைய செட்டியாரவர்களின் மறைவு தமிழ் நாட்டின் அரசியல், பொருளியல், கல்வி, இசை ஆகிய துறைகளுக்கு ஒரு பேரிழப்பே

யாகும். மறைந்த அப் பேரரசரின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர் தம் இன்னுயிர் தில்லைப் பெருமான் திருவடிகளில் என்றும் இன்புற இறைஞ்சுகிறோம்.

வரலாறு:

இராசா சர் முத்தைய செட்டியாரவர்கள், இராசா சர் அண்ணா மலை செட்டியாரவர்களின் திருமகனாராக 1905, ஆகஃச்டு மாதம் 5ஆம் தேதி பிறந்தார். சென்னை வேப்பேரியில் தொடக்கக் கல்வி பயின்றார். பின்னர்த் திருச்சி செயின்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் பயின்று பி. ஏ. பட்டம் பெற்றார். பட்டப் படிப்பை முடித்தபின் தம் தந்தையாரின் தொழில் நிறுவனங்களில் ஈடுபாடு கொண்டு நல்ல பயிற்சியும் பெற்றார்.

பின்னர்ப் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு 1932இல் சென்னை மாநகர்த் தந்தையானார். அப் பதவிக்கு இவர் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு 1936 வரை அப் பதவியிலிருந்தார். 1936இல் நீதிக்கட்சி, சென்னை மாநில ஆட்சிப்பொறுப்பினை ஏற்றபோது, அதில் ஓர் அமைச்சராகிக் கல்வி, நலத்துறை, ஊராட்சி ஆகிய துறைகளின் அமைச்சரானார். பல ஆண்டுகள் சட்டமன்ற மேலவை உறுப்பின ராகவும் இருந்து வந்தார். 1942 முதல் 1964 வரை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். செட்டிநாடு சிமெண்டு நிறு வனத்தின் தலைவராகவும், பல ஆண்டுகள் இந்தியன், இம்பீரியல் வங்கி இயக்குநராகவும் இருந்து வந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தராக இருந்து இவர் ஆற்றிய கல்விப் பணிகள் மிகப் பல. இவரது முயற்சியால் அப் பல்கலைக் கழகத்தில் தொழிற் கல்வி கொண்டுவரப்பட்டது. மருத்துவத் துறையிலும் பல் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்ட தோடு அடுத்து மருத்துவக் கல்லூரி தொடங்க ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

தமிழ் நாட்டில் இசை என்றால் தெலுங்கு இசைதான் என்றிருந்த நிலையினை மாற்றி, இவர்தம் தந்தையார் நிறுவிய தமிழிசைச் சங்கத்தை வளர்த்து வரும் பாங்கு நாடறிந்த செய்தி. இவர்தம் மனைவியார் மெய்யம்மை ஆச்சி அவர்கள் பெயரால் பள்ளிகள் பல நடைபெற்று வருகின்றன. இவர்தம் ஆட்சியில் இருக்கும் நிறு வனங்களில் தொண்டாற்றுவோர் தொகை பல ஆயிரக்கணக்கில் அமைந்திருப்பது உண்மை.

———

"தமிழிசைக் காவலர் செட்டிநாட்டரசர்"

[செந்தமிழ்க் காவலர் இராம. பெரி. பெரியகருப்பன் செட்டியார்]

தமிழிசைக்குத் தலைப்பாகை தந்தை கட்ட
தார்ப்பாச்சும் தான்கட்டித் தாவிப் பாய்ந்தே
அமுதனைய தமிழிசைக்குத் தந்தை பின்னால்
அதைக்காக்க வந்தீர்ஓர் தனய னாக
எமதண்ணா மலையரசர் போல நாளும்
இனியபல தொண்டாற்றி இந்த நாட்டின்
தமிழ்த்தூணாய் வாழ்ந்தவரே செட்டி நாட்டின்
தனியரசே முத்தையா தகுதி மிக்காய்!

ராசாசர் என்றிட்டால் உம்மை யன்றி
எவர்நினைவும் எம்நெஞ்சில் வருவ துண்டோ!
ரோசாபோல் சிரித்தமுகம், நொந்து வந்தோர்
நிலைகண்டு வழங்கிவந்த நீண்ட கைகள்,
கூசாமல் எடுத்துரைக்கும் நெடிய பேச்சு
குறிப்பாகப் பழமைகளை எடுத்துக் கூறிப்
பேசாமல் பேசவைக்கும் பெரியோய்! நீயும்
பேச்சொழிந்து எமைவிட்டே எங்கு போனாய்?

செட்டியார்தம் திருநாட்டின் பெரிய புள்ளி
சேர்ந்துள்ள பிறரெல்லாம் சிறிய புள்ளி
அட்டியில்லை அதிலொன்றும்; அறிவா சானாய்
ஆன்றதமிழ்க் கலையெல்லாம் நிலைத்து வாழ
கொட்டிநிதி பலகுவித்த கோமான் ஆனாய்
கோபுரத்தின் கலசம்நீ சாய்ந்து விட்டாய்!
செட்டிநாட் டரசரென இனியார் உள்ளார்?
செந்தமிழ்த்தாய் திருவடியில் சேர்ந்தாய் வாழ்க!

தமிழிசையும் அழுகிறதே!

அண்ணா மலையரசர் அன்புமகன் முத்தையா
விண்ணார்ந்த மாமலைபோல் வீழ்ந்திட்டான்—பண்ணார்ந்த
தெய்வத் தமிழிசையும் தேம்பி அழுகிறதே
தொய்யும் முகாரியில் தோய்ந்து.

—தே. முருகசாமி
(முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.)

அப்பர் பாடிய ஆறை வடதளி

[டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ.]

(முன் இதழ் ௩௬௭ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகாமண்டபத்தின் வடகிழக்குப் பகுதியில், மேற்கு நோக்கிய நிலையில், வைரவர், கதிரவன், பிள்ளையார் வடிவங்கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்தை அடுத்த உள் மண்டபத்துக்குள் ஒன்றுமில்லை. கருவறையில் இறைவன் இலிங்கவடிவில் அருள்மிகு தர்மபுரீசுவரர் என்ற திருப்பெயரில் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலின் மேல் வெளிச்சுவரில், வடமேற்கு மூலையில், மகாமண்டபத்தின் புறச்சுவரில் உள்ளடங்கிய தேவகோட்டம் ஒன்றில், பிற்காலத்து வேலைப்பாடுகளுடன், நளினமற்ற அம்மையப்பர் வடிவம் நிறுவப்பட்டுள்ளது. இதைக் குறிப்பிடும் திரு. வே. மகாதேவன், 'கோயில் புறமதில் கருவறையில் உள்ள அர்த்தநாரி உருவம் அழகியது' என்கிறார்.[14] கோயில் மகாமண்டபத்தின் புறச்சுவரில் உள்ள புரைபோன்ற பகுதிகள் தேவகோட்டம் எனப்படும். இதைக் கருவறை எனக் குறிப்பது தவறாகும். இறைவன் அல்லது இறைவி எழுந்தருளியிருக்கும் கோயிலின் உள்ளீடான இடமே கருவறை என்று வணங்கப்படுகின்றது, புறச்சுவர்களில் தெய்வ வடிவங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்கள் தேவகோட்டங்களாகும். இவற்றைக் கருவறை என்பது சற்றும் பொருந்தாது. சோழர்களின் கோயில்களை ஆய்ந்தறிந்து பல அரிய நூல்களைப் படைத்தளித்த சோழர் கலையியல் அறிஞர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள், தம்முடைய 'முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்' என்னும் நூலில் கலைச்சொற்களை விளக்கும் இடத்தில் கருவறை என்பதற்குக் 'கோயிலின் பிரதானமான தெய்வத்தின் இருப்பிடம்' என்றுபொருள் கூறுவது இங்கு நினைவு கூரத்தகுந்தது.[14a]

உள்மண்டபத்தின் புறச்சுவர் கோட்டங்களில், வடபுறம் கொற்றவை வடிவமும், தென்புறம் நின்றநிலையில் பிள்ளையார் வடிவமும் காணப்படுகின்றன. கருவறையின் புறச்சுவர் கோட்டங்களில் வடபுறம் நான்முகனும், தென்புறம் தென்திசைக் கடவுளும்,

---

14. வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர், திரு. வே. மகாதேவன், பக். 45.

14a. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பக். 419.

கிழக்கில் லிங்கோத்பவரும், லிங்கோத்பவரின் இருபுறமும் நான் முகனும் திருமாலும் காட்சி தருகின்றனர். வடகிழக்கு மூலையில் சண்டேசுவரருக்கென்று சிறு சுற்றுலைக் கோயிலொன்று உள்ளது.

இக் கோயிலின் விமானம் இருதளங்களைக் கொண்டதாய் அமைந்துள்ளது. மேல்தளம் சாலை, கர்ணகூடுகளுடன் உள்ளது. கழுத்துப் பகுதியில் விமான தேவதைகள் காணப்படுகின்றன. சிகரம் திராவிட முறையில் அமைந்துள்ளது.

இக் கோயிலில் கல்வெட்டுகளே இல்லை. இப்போது காணப் படாதது மட்டுமல்ல; இருந்து படியெடுக்கப்பட்டதாகவும் எந்த ஒரு குறிப்பும் இல்லை. ஆனால் திரு. வே. மகாதேவன் பழையாறை வடதளியில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன என்று குறிப் பிட்டுள்ளார்[15] தருமபுர ஆதீன வெளியீடான ஐந்தாம் திருமுறை யில், தலங்களைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புப் பகுதியிலும் இது போலவே, ஆறை வடதளியில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.[16] இவ்விரண்டு கல்வெட்டுகளும் 1927 ஆம் ஆண்டு கல்வெட்டறிக்கையில் 254, 255 என்ற எண்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளதாய் இவ்விரண்டு நூல்களிலும் அடிக்குறிப்பு தரப்பட்டுள்ளது. 1927 ஆம் ஆண்டுக்கான கல்வெட்டறிக்கையில், இக் கல்வெட்டுகள் அழிந்த நிலையில் இருக்கும் ஒரு சிவன் கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்டதாகத்தான் குறிப்பிடப் பட்டுள்ளதே தவிர. கோயிலின் பெயர் குறிக்கப்பெறவில்லை.[17] இந்தக் கல்வெட்டறிக்கை குறிக்கும் சிவன் கோயில், பழையாறை சோமநாதர் கோயில்தானே தவிர ஆறை வடதளியல்ல, நான் இவ் விரண்டு கோயில்களையும் நேரில் பார்வையிட்டவன். ஆறை வட தளியில் மகாமண்டபத்தைத் தாங்கும் தூண்கள் மிகமிகப் பிற்பட்ட காலத்தவை. அவற்றில் எந்தக் கல்வெட்டும் இல்லை. பழையாறை சோமநாதர் கோயிலின் மகாமண்டபத்துத் தூண்களில்தாம் இக் கல் வெட்டுகள் உள்ளன, இவற்றை நான் ஒளிப்படம் எடுத்ததோடு, கல்வெட்டுகளையும் மறுமுறை படித்தேன். தொல்பொருள் ஆய்வுத் துறையின் திருச்சி மாவட்டப் பதிவாளர் திரு. அப்துல் மஜீதைக் கொண்டும் படிக்கச் செய்தேன். இக் கல்வெட்டிலேயே கோயிலின் பெயர் 'சொமந(க)தெவர் கொயில்' என்று குறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் பிற்பகுதியைக் கீழே காண்க:

---

15. வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர், திரு வே. மகாதேவன், பக். 44.

16. ஐந்தாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, பக். 7

17. A.R E. 1927, கல்வெட்டு எண்கள் 254, 255.

(1)	....	(7)	ம் சொபானமும் பொரு
(2)	....	(8)	வனூருடையார் வா
(3)	....	(9)	ணுத ரா ராயன்
(4)	சித்திரை மாதம் சொ	(10)	நரசிங்க தெவர் தி
(5)	மனு(த)தெவர் கொயிலி	(11)	ருப்பணி.
(6)	ல் பெரிய மண்டபமு		

சோமனுத தேவர் கோயிலில் உள்ள பெரிய மண்டபத்தையும், சோபானத்தையும் (படிகளையும்) பொருவனூர் வாணுதராயன் நரசிங்கதேவன் கி.பி. 1453இல் (சகவருடம் 1375, ஸ்ரீமுக ஆண்டு, சித்திரைத் திங்களில்) கட்டியதை இக் கல்வெட்டு கூறுகிறது.

இன்னெரு கல்வெட்டு சோமனுதர் கோயிலில் உள்ள தூண் ஒன்றை இந் நரசிங்கதேவன் நிறுவியதாகச் சொல்கிறது.

பழையாறை சோமனுதர் கோயிலில் உள்ள இவ்விரண்டு கல்வெட்டுகளையும் ஆறை வடதளியில் இருப்பதாகத் திரு. வே. மகாதேவனும், தருமபுர ஆதீன வெளியீடான ஐந்தாம் திருமுறையில் தலவரலாற்றுக் குறிப்புகள் எழுதிய அறிஞர் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களும் கூறித்திருப்பது மிகவும் தவருகும். கல்வெட்டிலேயே கோயிலின் பெயர் இருந்தும் கூட, கல்வெட்டறிக்கையில் இக் கோயிலின் பெயரைக் குறிப்பிடாது, 'அழிந்து கொண்டிருக்கும் சிவன் கோயிலில்' இருந்து எடுக்கப்பட்டதாக மட்டும் குறித்திருப்பது கல்வெட்டறிக்கை தயாரித்தவர்களின் கவனக் குறைவைக் காட்டுகிறது.

இனி, இம் மாடக் கோயிலின் வரலாற்றைக் காண்போம். அப்பர் பாடியதால், சம்பந்தரின் திருவடிகளும் இங்குப் பட்டதாகச் சேக்கிழார் கூறுவதால், இக் கோயில் கி.பி. ஏழாம் நூற்ருண்டில் இருந்தமை தெளிவாகின்றது. இக் கோயிலின் கட்டட அமைப்பு முறை ஆவூர் பசுபதீசுவரர் கோயில், அம்பர் பெருந்திருக்கோயில் முதலியவற்ருேடு பெருமளவில் ஒத்திருக்கிறது. எழுபதுக்கு மேற்பட்ட மாடக் கோயில்களை எழுப்பியதாகக் கோச்செங்கணுனைத் திருமங்கையாழ்வார் புகழ்கிருர். ஆவூர், அம்பர் கோயில்கள் கோச்செங்கணுனுல் எழுப்பப்பட்டவை. அதே கட்டட முறையில் அமைந்துள்ள இம் மாடக் கோயிலும் கோச்செங்கணுன் கட்டியதே எனக் கொள்வதில் தவறில்லை. அதுதான் பொருத்தமும் கூட. கோச்செங்கணுனின் செங்கல் கட்டடம் அழிந்துபோன நிலையில், சோழ

மன்னர்களுள் யாரேனும் ஒருவரால் இது பிற்காலத்தில் திருப்பணி செய்யப்பட்டிருக்கலாம்.

முதலாம் இராசராசனின் தஞ்சைக் கல்வெட்டுகளில் ஆறை வடதளி குறிக்கப்பெறுகிறது. இராசராசன் தஞ்சையில் அமர்த்திய தளிச்சேரிப் பெண்டிரில், இக் கோயிலில் இருந்து சென்றவர்கள் பதின்மூவராவர். நக்கன் வீராணி, நக்கன் தென்னவன் மாதேவி,[18] நக்கன் சோழகுல சுந்தரி[19] நக்கன் நயனவல்லி, நக்கன் பெற்றதிரு,[20] நக்கன் அமுதம், நக்கன் சூளாமணி, நக்கன் ஏகவீரி,[21] நக்கன் ஒருப்பணை,[22] நக்கன் சீலசூளாமணி,[23] நக்கன் இராமி, நக்கன் சிங்கடி, நக்கன் சீலசூளாமணி[24] முதலியோர் வட தளிக்குரியவராய்க் குறிக்கப் பெறுகின்றனர். இராசராசன் காலத்தில் பதின்மூன்று தளிச்சேரிப் பெண்டிரைத் தஞ்சைக்கு அனுப்பக்கூடிய நிலையில் ஆறை வடதளி செழிப்போடும் பெருமையோடும் இருந்திருக்க வேண்டும். அப்படியானால் கோச்செங்கணான் எழுப்பிய இக் கோயிலைத் திருப்பணி செய்த மன்னன், காலத்தால் முதலாம் இராசராசனுக்கு முற்பட்டவன் என்பது திண்ணம். முதலாம் இராசராசனுக்கு முற்பட்ட வேந்தர்களுள் அதிக அளவில் கோயில் திருப்பணி செய்தவர்களாய் அறியப்படுபவர்கள் முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், உத்தமசோழன் முதலிய வேந்தர்களே. இம் மூவருள்ளும் முதலாம் ஆதித்தனும், முதற் பராந்தகனுமே கணக்கற்ற செங்கல் தளிகளைத் திருப்பணி செய்து புதுப்பித்திருக்கிறார்கள். எனவே ஆறை வடதளியைச் சீரமைத்துச் சிறப்புக்குரிய தலமாக்கியவர்கள் இவ்விருவருள் ஒருவரே எனத் துணியலாம்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் துக்காச்சியும், தாராசுரமும், திரிபுவனமும் ஏற்பட்ட நிலையில், ஆறை வடதளி தன் புகழ் மங்கிப்

---

18. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், டாக்டர். இரா. நாகசாமி, பக். 57.

19. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், டாக்டர். இரா. நாகசாமி, பக் 66.

20. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், டாக்டர். இரா. நாகசாமி, பக். 70.

21. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், டாக்டர். இரா. நாகசாமி, பக். 75.

22. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், டாக்டர். இரா. நாகசாமி, பக். 77.

23. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் டாக்டர். இரா. நாகசாமி, பக் 79.

24. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், டாக்டர். இரா. நாகசாமி, பக். 89.

பெருமைகள் குன்றி, ஒடுங்கியிருக்க வேண்டும். நாயக்கர்கள் காலத்தில் இங்குள்ள பலகோயில்கள் புதுப்பிக்கப்பட்டுச் சீரமைக்கப் பட்டன. பட்டீசுவரம் ஓர் எடுத்துக்காட்டு. அதைப் போலவே ஆறை வடதளியும் நாயக்கர்களால் திருப்பணி செய்யப்பட்டிருக்க லாம். இங்குள்ள சிற்பங்கள் பலவும் பிற்பட்ட காலத்தவை. சோழர்க் குரிய அமைப்பும், அழகும், நளினமும் குறைந்தவை.

இன்றைய நிலையில் இக் கோயில் மிகமிகத் துன்பத்தைத் தரும் நிலையில் உள்ளது. அப்பரே மறுபிறவி எடுத்துவந்து, மறுபடியும் ஓர் உண்ணுநோன்புப் போராட்டம் நடத்தினால்தான் இக் கோயிலைக் காப்பாற்றமுடியும் போலிருக்கிறது. அல்லது அந்த ஈசனே, சோழ மன்னன் கனவில் போனதுபோல் பொறுப்பில் உள்ளவர்கள் யாருடைய கனவிலாவது போய்த் தன் கோயிலைக் காப்பாற்றும்படி வேண்டினால்தான் செயல்கள் நடைபெறும், கோயிலும் சீர்பெறும் என்று தோன்றுகிறது.

இக் கோயிலில் வழிபாடுகளைச் செய்துவரும் திரு. சித்தநாத குருக்கள் அற்புதமான இளைஞர். அவரது ஆர்வமும், வரலாற்று அறிவும் நம்மை வியக்க வைக்கின்றன. என் கோயில் பயணங்களில், பல அருமையான மனிதர்களை நான் சந்தித்திருக்கின்றேன். இந்த சித்தநாத குருக்களை அவர்களுள் ஒருவராய்க் கொள்ளலாம். இது போல் அன்பர்கள் உள்ள தலங்கள் கூட, கவனிப்பாரற்றுக், காலத்தின் கடும்பசிக்கு இரையாகிப் போவதுதான் கொடுமையானது. இதைத் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தவிர்க்க முயல வேண்டும்.

———

காயங்களை ஆற்றத் தேன் உதவுகிறது

தேன் சத்துள்ள ஓர் உணவுப் பொருள் என்பதும், அதற்குச் சில மருத்துவப் பண்புகள் உள்ளன என்பதும் நாமெல்லாம் அறிந்ததே. காயம்பட்ட இடத்தில் தேனைத் தடவினால் காயம் ஆறிவிடுகிறது என்று தாய்லாந்தில் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் இப்போது தெரியவந்துள்ளது. பாங்காங் நகரிலுள்ள மருத்துவமனை ஒன்றில் நாட்பட்ட காயங்களைக் கொண்ட 30 நோயாளிகளின் காயங்களில் தேன் பூசிக் கட்டுப் போடப் பட்டது. அவர்களுள் 13 பேர்களுடைய காயங்கள் ஆறி விட்டன. இதற்கு 7 முதல் 38 நாள் வரை ஆயிற்று. காயங் களிலுள்ள பாக்டீரியாக்களின் எண்ணிக்கை, தேன் பூசப்படுவ தால், குறிப்பிடத்தக்க அளவு குறைந்து காணப்படுவதே, காயம் ஆறுவதற்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நன்றி: அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக்கழகம்.

கலைக்களஞ்சியக் கலை

[திரு. சிறுவை. மோகனசுந்தரன் அவர்கள்]

முதலில் கலைக்களஞ்சியம் என்றால் என்ன ? என்று பார்ப்போம். கலைக்களஞ்சியம் என்ற சொல்லிற்கு மூலம் கிரேக்கம். கிரேக்க மொழியில் என்கைக்லோபீடியா (Enkyclopaedia) எனின் "ஒரு வட்டம் அல்லது ஒரு முழுமையான ஏற்பாட்டின் அல்லது ஒழுங் கமைப்பு முறைப்படி கற்றல்" என்பது. ஜெர்மானிய எழுத்தாளரும் பதிப்பாசிரியருமாகிய பால் ஸ்காலிக் (Paul Scalic) என்பவர் 1559இல் முதன்முதலில் கலைக்களஞ்சியம் என்ற சொல்லிற்கு, 'உலக ஒழுகலாறு' (desiplines) அறிவு என்பார். சுருங்கக் கூறின் அகராதி எனலாம் என்பர். எந்த நல்ல அகராதியையும் கலைக் களஞ்சியம் என்று கூறுவதில்லை என்ற முடிபும் உண்டு.

மேலும் நாம் இதனை விரிவாக்கினால், "தம் அறிவுக் கூர்மை யின் திறத்தால் பல்வேறு வகையான பெருநூல்களின் சுருக்கத் தைப் படைத்தளிப்பது" எனலாம்.

* புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் திரு எச். ஜி. வெல்ஸ், "அது பல திறப்பட்டதாகும்; ஆனால் செறிவு காணப்படும். ஒருவிதத் தெளிவும் ஒரு கூட்டு முயற்சியும் அதில் உண்டு" என்று கூறுகிறார்.

* கலைக்களஞ்சியத்தைப் பற்றி ஆக்ஸ்போர்டு அகராதியில் காணும் குறிப்பு "அறிவுத் துறைகள் எல்லாவற்றையும் பற்றிய விரிவான செய்திகளைக் கொண்டுள்ள இலக்கிய நூல். அது பெரும்பாலும் அகர வரிசையில் எழுதப்படும்.

* வெப்ஸ்டர்ஸ் அகராதி, "அறிவு சார்ந்த பல்வகைத் துறைகள் எல்லாவற்றையும்பற்றி மிக விரிவாகச் சொல்லும் ஒரு நூல் பெரும்பாலும் அகர வரிசையில் அடுக்கப்பட்ட தனித்தனிக் கட்டுரைகள் கொண்டதாகும். அன்றியும் ஒரு குறிப்பிட்ட அறிவுத்துறையை மட்டும் ஆய்வு செய்யும் அத்தகைய நூல்.

* எல்லாப் பொருளும் இதன்பால் உள எனலாம். குறிப் பிடத் தகுந்த கருத்துகள் பிரதிபலிக்காவிடினும் ஒன்று

நிச்சயம், நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள்பற்றி இவ்வளவு தானு தெரிந்தோம் என்ற வியப்பு எழும்,

* நமது சென்னைப் பல்கலைக்கழக அகராதி, ''பல்பொருள் விளக்கம்'' என்று குறிக்கிறது.

மேற்கண்ட சிந்தனைகளைக் கண்ட பிறகு மனிதன் கற்க வேண்டும் எனவும் கற்பவை கசடறக் கற்க வேண்டும் எனவும் அவா மிகுந்து கற்க முற்படுகிருன், கற்க முற்படும்போது மனித அறிவின் கூறுபாட்டை பிரான்சிஸ் பேக்கன் (Francis Becon) எனும் சிந்தனையாளர்பற்றிய குறிப்பினை உங்கள் முன் வைக்கிறேன்.

''மனித மனம் சுற்றிலும் உள்ள பொருள்களைக் காண்கிறது. அப்படிக் காணும்போது சரியாகவும் நியாயமாகவும் தெரிந்துகொள்ள வேண்டியவைகளை அறியும் பொருட்டு அறிவியல், கலைகள், அனைத்துமான மனித அறிவு ஆகியவற்றை முழுவதுமாகத் திருத்தியமைக்கத் தொடங்குவதே கலைக்களஞ்சியமாகும்''. இந்த மிகப் பெரிதான பணியின் ஒரு சிறு கூறுதான் இதுவரை முடிக்கப்பட்டுள்ளது. ஆனுல் இந் நூலின் ஆசிரியர் 130 பிரிவுகளாக இதை எழுதத் திட்டமிட்டிருக்கின்ருர். இந்த 130 பிரிவுகள் மூன்று முக்கியமான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.


1. புறத்தே உள்ள இயற்கை அமைப்பு
2. மனிதன்
3. இயற்கையின் மீதான மனிதனின் செயல்பாடு

இதனுடைய பொருளடக்கத்தைப் பார்க்கும்போது முழுவதும் அறிவியல் பூர்வமாக உள்ள ஒரு கலைக்களஞ்சியத்தைத் தொகுப்பதே பேக்கனுடைய நோக்கம். ஆனுல் அந்தோ இத்தகைய முயற்சி மனித ஆற்றலுக்கு மேற்பட்டதாகும். இதனை இந்த பேக்கன் அவர்களே புரட்சிகரமானது என்பதை ஒப்புக்கொள்கிருர்.

இந்த பிரான்சிஸ் பேக்கன் அவர்கள் மனிதன் கற்கும்போது அவனது அறிவின் கூறுபாட்டைக் கீழ்க்கண்ட முறையில் வகைப்படுத்திப் பார்க்கிருர். இது சிந்திக்கத் தக்கதொன்ருகும். அது,


அட்டவணை 1

பிரான்சிஸ் பேக்கன் மனிதன் கற்றலின் அறிவை வகைப்படுத்துகிறர்
(Francis Becon's classification of knowledge)



இங்ஙனம் மனித அறிவை வகைப்படுத்திப் பகுத்துணர்ந்து மனிதன் முழுமையான ஆற்றல் வாய்ந்தவனுக விளங்க, பல்வேறு துறைகளில் கற்று, தேர்ந்து, தெளிதல் வேண்டும் என்று திரு. பேக்கன் சிந்தித்தார். இதனையே மற்றேர் அறிஞர் குழு கீழ்க்கண்ட முறையில் அறிவுத் துறையை வகைப்படுத்திச் சிந்தித்துச் செயல் படப் பார்த்தனர். அம்முறை,

அட்டவணை 2



1. பொருண்மையும் ஆற்றலும் (Matter and energy)
2. நிலம் (The Earth)
3. வையத்தில் வாழ்தல் (Life on earth)
4. மனித வாழ்க்கை (Human Life)
5. மக்கள் சமுதாயம் (Human Society)
6. கலை (Art)
7. தொழில் நுட்பவியல் (Technology)
8. சமயம் (Religion)
9. மானிட வரலாறு (History of Mankind)
10. அறிவுத்துறைகள்

ஆகவே நல்லறிஞர்கள் இவ்வாறெல்லாம் சிந்தித்து, கிழக்கு மேற்கு நாடுகளில் வளர்ந்துள்ள அனைத்து அறிவியல் நுட்பங்களையும் வரலாறுகளையும் கண்டு தெளிந்து ஒரு முழுமையான மனிதன் சிறந்தவைகளைச் சிந்தித்துச் செயல்படவும் பலவற்றை அறிந்து கொள்ளுதலும் இன்றியமையாத தேவை என உணர்ந்தவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட சிந்தனைகளை உள்ளடக்கிக் கலைக்களஞ்சியம் உருவாக்க முயன்றனர். அங்ஙனம் உருவாக்கியபோது,

கலைக்களஞ்சியம் பிரிட்டானிக்கா முதல் பதிப்பாக முதன்முதல் 1768—71இல் 3 தொகுதிகள் வெளியாயின.

ஒன்பதாம் பதிப்பாக 1875-89இல்

பதினோராம் பதிப்பு 1910-11இல்

இதன் பின்னர் பல பிற்சேர்க்கைகள் வந்தன. பின்னர் கட்டுரைகள் ஒழுங்கமைப்புடன் கூடியனவாகவும் அதிகார பூர்வமான குறிப்புகளுடனும், கட்டுரைகளில் செய்திகள் விரிவாகவும் அதே சமயத்தில் சுருக்கமும் செறிவும் உடையனவாயும், மதிப்பீட்டுத் தன்மை உடையதாய், அனைத்து நாட்டிற்கும் உரியதாய் அமைந்து 14ஆம் பதிப்பு 1929இல் வெளியாயது.

அதன் பின்னர் 'கலைக்களஞ்சியம்' என்ற சொல்லிற்கு உரிய பொருளை விவரிக்க முயன்றனர். 1. கிடைக்கக் கூடிய பலவகை அறிவுத் துறைகள் அனைத்திற்கும் சுருக்கம் கண்டனர். 2. நாட்டுப் படங்களும் (Maps) விரிவான அட்டவணையும் கண்டனர். 3. பெரு நூல்களின் சுருக்கத்தை அமைக்கச் சில தழுவு முறைகளைக் கையாண்டனர். எடுத்துக்காட்டாக நூலடைவுப் (Bibliography) பட்டியல், விளக்கப் படங்கள் (illustrations), வரை படங்கள் (diagrams), சுருக்கக் குறிப்பு (List of abbreviations), அயல் மொழித் தொடர்பு (foreign expressions), பதிவேடுகளின் குறிப்புகள் (Gazetteer) போன்றவைகள்.

இவைகளையெல்லாம் கருத்துள் கொண்டு,

* 'கலைக்களஞ்சியம் பிரிட்டானிக்கா' 1938இல் 24 தொகுதிகளாக வெளிவந்தன. இது நீங்கலாக,
* சேம்பர்ஸ் கலைக்களஞ்சியம் 1923-27இல் 10 தொகுதிகள் வெளியாயின.
* New International Encyclopaedia 1914-16இல் 27 தொகுதிகள்.
* Encyclopaedia of Americana 1949இல் 30 தொகுதிகள். பின்னர் இது பல இணைப்புத் தொகுதிகளை வெளியிட்டன.
* இங்கிலாந்தில் 1931-32இல் 12 தொகுதிகள்; (ஒரு தொகுதி நாடுகளின் படங்கள் (Maps) வெளிவந்தன.)
* கொலம்பியா கலைக்களஞ்சியம்—ஒரே ஒரு தொகுதியில் வெளிவந்தது (Single Vol. Encyclopaedia)
* ஜெர்மனியில் ஜெட்லர் என்பவர் 1732-50இல் 64 தொகுதிகளாகவும், பின்னர் 1928-35இல் 21 தொகுதிகள் தயாரித்தார்.
* Mayers Conversation—Lexicon 1936-42 10 தொகுதிகள் (இதில் புவியியல், அறிவியல், தொழில் நுட்பவியல் இருந்திருக்கிறது என்பர்).
* ஜெர்மன் கலைக்களஞ்சியம் 1945இல் 6 தொகுதிகளாக வெளிவந்தது (இதில் முதலில் வெளியானதைவிடச் சில கட்டுரைகள் பெரிதாக்கப்பட்டன).
* ஃபிரெஞ்சு கலைக்களஞ்சியம் 1886-1902இல் 31 தொகுதிகளாக வெளியாயிற்று. இதில் அறிவின் திறம் மேம்பட்டுள்ளது.

* புதுமைக் கலைக்களஞ்சியங்கள் பலவற்றுள்ளும் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது இத்தாலி—ஸ்பெயின் நாட்டுக் கலைக்களஞ்சியம் 37 தொகுதிகள் (1929-30). இதில் மிகச் சிறந்த நீண்ட கட்டுரைகளும், நேர்த்தியும் அழகும் மிக்க விளக்கப்படங்களும் உள்ளன.

* ஸ்பானிஷ் கலைக்களஞ்சியம் 87 தொகுதிகள் (1905-47).
* 'வரலாற்றுக் கால கலைக்களஞ்சியம்' என மூன்று தொகுதிகள் வெளிவந்துள்ளன. (1) 1960 வரை. (2) 1601-1799 வரை. (3) 1800 வரை.

* 'பல்பொருள் அறிவு நிரம்பிய கலைக்களஞ்சியம்' (Encyclopaedia Dictionary) 17, 18ஆம் நூற்றாண்டில் வெளிவந்தது.

* மூன்று ஸ்காட்லாந்து அறிஞர்கள் 'புதுமைக் கலைக் களஞ்சியம்' என்ற பெயரில் வெளியிட்டனர். அவர்கள்,

  Andrew Bell (1726-1809),
  Colin Macfarguhan (1745-93),
  William Smeller (1740-95)

* Children's Encyclopaedia (1928-30)
* Pictorial Encyclopaedia (1910)
* Books of Knowledge (1912)
* World Book Encyclopaedia (1917-18) 20 Vols.
* Students Encyclopaedia
* Britanica Junior Encyclopaedia
* Oxford Junior Encyclopaedia (1955-76) 12 Vols.
* Crompton's Pictorial Encyclopaedia (1922) 15 Vols.
* Australian Encyclopaedia (1958) 10 Vols.
* 19ஆம் நூற்றாண்டில் சேம்பர்ஸ் 'The New Encyclopaedia' என்ற பெயரில் வெளிவந்தது. இதில் உள்ள கட்டுரைகள் எல்லாம் புதியன. மிகச் சிறப்பான வகையில் அமைந்துள்ளது (1802-20). மீண்டும் 1860-68இல்.

* போலந்தில் - 1860 - 90.
* ஹங்கேரியில் - 1861 - 76.
* ரஷ்யாவில் 'பல்பொருள் அறிவு நிரம்பிய குறிப்புத் தொகுப்பகராதி' (Encyclopaedia Reference Dictionary) 1847-55இல் வெளியாயது. பின்னர் கலைக் களஞ்சியம் 58 தொகுதிகள் (1910-48).
* "The Great Soviet Encyclopaedia" என்று 65 தொகுதிகள் வெளிவந்தன. (1926-47) இரண்டாம் பதிப்பாக 1949-58இல் வெளிவந்தது. இதில் 8000 அறிஞர்கள் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். ஒரு தொகுதி முழுவதும் சோவியத் யூனியனைப் பற்றியதாகும்.
* Colliers Encyclopeadia 1955இல் 20 தொகுதிகள்.
* U. S. New International Encyclopeadia-1902-04 Mc. Graw Hill, Kirk & other Encyclopaedia of Science and Technology (1949-56) 15 தொகுதிகள். 1978இல் 3ஆம் பதிப்பு. பிற்சேர்க்கையும் வந்து கொண்டிருக்கின்றன.
* "International Encyclopaedia of the Social Science" 1968இல் 16 தொகுதிகள்.
* "Imperial Gazetteer of India" என்ற அறிவுப் பெட்டகம் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் 25 தொகுதிகள் வெளிவந்துள்ளன.

குறிப்பு: ஆங்கிலேயர் ஆட்சி நடைபெறவும்—வரி வசூலிககவும் தங்கள் பணியாளர்களுக்குப் பயன்படும் வகையில் வெளியிட்டனர் எனலாம். இந்தத் தொகுதிகளில் இந்தியாவில் உள்ள மலைகள், ஆறுகள், துணை ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், பெரும் குளங்கள், சாலைகள், பயிர் வகைகள், மர வகைகள், மக்கள் இனங்கள், ஒழுகலாறுகள், சமய வழிபாடுகள், கோயில்கள், மடங்கள் இன்ன பிற அமைந்துள்ளன. மக்கள் தொகை குறிப்பும், ஜமீன் முறைகளும் உள்ளன.

இதுவரை இயன்றவரை பல்வேறு கலைக்களஞ்சியக் குறிப்புகளைத் தந்துள்ளேன். மேலும் காலமின்மையால் விடுபட்டவை பல.

(தொடரும்)

———

சங்க நூல்களில் கரந்தை

[பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)]

சங்க நூல்களில் கரந்தை என்றொரு செடி கூறப்பட்டுள்ளது.

''நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரையிவட் டந்து நடுக லாகிய
வென்வேல் விடலை யின்மையிற் புலம்பி'' —புறம். 261

இந்தப் பாட்டில் ''நாகினது முலை போன்று நறிய பூவையுடைய கரந்தையை அறிவுடையோர் சூட்டு முறைமையிலே'' என்று உரை கூறப்பட்டுள்ளது. இதற்குக் கூறிய அடிக்குறிப்பில் உ. வே சாமி நாதையர் ''கரந்தையாவது தன்னுறு தொழிலா நிரை மீட்டோர் பூச்சூடுதலிற் பெற்ற பெயராதலின் வெட்சித்திணை போல ஒழுக்க மன்று ; அந்தோ வெந்தை யென்னும் புறப்பாட்டினுக்கு நாகுமுலை யன்ன நறும்பூங்கரந்தை, விரகறியாளர் மரபிற் சூட்ட, நிரை யிவட்டந்து என்றவாறு காண்க'' என்று தொல்காப்பியப் புறத்திணைச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையை எடுத்துக் காட்டி யுள்ளார். கரந்தையென்ற செடியைப்பற்றிக் கூறியுள்ள பிற பாடல் களையும் பார்ப்போம்.

''கரந்தை நீடிய வறிந்து மாறு செருவிற்
பல்லா னினநிரை தழீஇய வில்லோர்'' —புறம். 269

கரந்தை உழும் வயலில் விளையும் ஒரு செடியாகக் கூறப்பட்டுள்ளது. கரந்தை—ஒருவகைப் புதர்ப் பூ ; இப் பூவாற் தொடுத்த மாலை நிரை மீட்டோர் சூடுவது மரபு என்று உ. வே. சாமிநாதையர் அடிக் குறிப்பில் கூறியுள்ளார்.

''இரும்பனை யன்ன பெருங்கை யானை
கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும்'' —புறம். 340

அந்தப் பாடலின் அடிக்குறிப்பில் கரந்தை ஒரு வகைப் பூடு. செறு —வயல் என்று உ. வே. சாமிநாதய்யர் கூறியுள்ளார்.

''பழனப் பைஞ்சாய் கொழுதிக் கழனிக்
கரந்தையஞ் செறுவின் வெண்குரு கோப்பும்''
—அகம். 226

''நறுவரை மஞ்ச ளீர்ம்புறம் பொலிய
வம்புகொண் டறுத்த வார்நா ருரிவையிற்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி'' —அகம். 269

இந்த அகநானூற்றுப் பாடல்களில் கரந்தைச் செடியே கூறப் பட்டுள்ளது. திணை கூறப்படவில்லை.

"கரந்தை யலரக் கவர்ந்த வினநிரைகள்
கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்"
—சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், வரி 17-18

சிலப்பதிகார ஊர்காண் காதையில் வரும் 'மறத்துறை முற்றிய மன்னவன் கோயிலும்' என்ற வரிக்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் மறமும் துறைகளும் விளங்குதற்குக் காரணமாகிய மன்ன வன் கோயிலும் என்று கூறி அதன் துறையான ஏழு வகையில் வெட்சி கரந்தை முதலிய திணைகளைக் கூறியுள்ளார். இங்குச் செடி கூறப்படவில்லை. குறிஞ்சிப் பாட்டில்,

"கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை" —76-77

என்று திணையையோ முதற் பொருளான நிலத்தையோ பின்பற்றுது கரந்தைச் செடி கூறப்பட்டது. கரந்தை மருதத்தில் வயலில் காணப் படுவதாகும். குளவி குறிஞ்சியில் காணப்படுவதாகும். தில்லை நெய்தலில் காணப்படுவது. பாலை வெயில் சான்ற நிலத்தில் காணப்படுவதாகும். முல்லை காடும் அது சார்ந்த நிலத்திலும் காணப்படுவதாகும். ஆதலின் குறிஞ்சிப் பாட்டில் கூறிய கரந்தை யும், குளவியும், தில்லையும், முல்லையும் இயற்கைக்கு ஒவ்வாது திணைமுறைக்கும் பொருத்தமற்றதாகும்.

"கரந்தையஞ் செறுவிற் றுணைதுறந்து களவன்
வள்ளை மென்கா லறுக்கு மூரன் —ஐங்குறுநூறு. 26

குறிப்புரையில் உ. வே. சாமிநாதய்யர் கரந்தையின் செறுவில்- கொட்டைக் கரந்தையை உடைய வயலில். கொட்டைக்கரந்தை வயலில் தோன்றுவதொரு பூடு. கொட்டாங் கரந்தையெனவும் வழங்கும் என்று எழுதியுள்ளார்.

"காய்த்த கரந்தை மரக்கொடி விளைவயல்
வந்திறை கொண்டன்று தானை யந்திற்"
—பதிற்றுப்பத்து 40, வரி 5-6

காய்த்த கரந்தையின் பெரிய கொடியின் வயலில் படை வந்து தங்கியது என்று கூறப்பட்டுள்ளது.

இதுகாறும் கூறப்பட்ட சங்க நூற் செய்திகளில் இருந்து கரந்தை என்பது ஒரு பூண்டு என்பதும் விளைவயலில் வளரும் என்பதும் தெரிகின்றது. இதன் பூ சிவப்பாகவும் நறுமண

முடையதாகவும் தெரிகின்றது. இந்தச் செடி இன்று கொட்டாங் கரந்தை என்று தமிழில் வழங்கப்படுகின்றது. இதன் பூ கொட்டை போன்று கருஞ்சிவப்பாக இருக்கும் என்று (Subglobular, Purplish red) என்று இருக்குமென்றும் அறிவியல் அறிஞர் கூறுவர். இது நெல் விளையும் நிலத்தில் கரையில் காணப்படும் என்று Colonel Heber Drury என்ற அறிஞர் Hand book of the India Flora என்பதில் எழுதியிருக்கிறார்.

கரந்தையில் இரண்டு வகை உண்டு என்று கூறுவர். ஒன்று சிவப்புப் பூவும் மற்றொன்று வெள்ளைப் பூவும் உடையதாகக் கூறுவர். சிவப்புப் பூவுடையது நாறு கரந்தையென்றும் விஷ்ணுகரந்தை என்றும் அழைக்கப்பட்டது. இந்தக் கரந்தைச் செடிகளில் கொட்டைக் கரந்தை விஷ்ணு கரந்தை என்று அழைக்கப்பட்டது. இதை Spaeranta Indian என்று அழைத்தனர். சிவகரந்தை நறுகரந்தையெனப்பட்டது. இது Spaerantium Teylanica என்று அழைக்கப்பட்டது; மணமுடையது. இதை East Indian Thistle என்றும் கொட்டைக் கரந்தை என்றும் அழைத்தனர். கன்னடத்தில் Karnada gida என்று அழைக்கப்பட்டது. ஆதலின் இந்த இரண்டு வகைக் கரந்தையின் பூவும் நறுமணமுடையதாகவும் கொட்டையைப் போன்ற உருண்டை வடிவமுடைய நாயின் முலை போன்ற பூவுடையதாகவும் கருதப்பட்டதாகத் தெரிகின்றது. இந்தக் கரந்தைப் பூக்கள் இன்றும் சிவனுக்குரிய பூவான காரணத்தால் காரைக்கால் பகுதியில் கோயில் நந்தவனங்களில் வளர்க்கப்படுவதைப் பார்த்திருக்கின்றேன். ஆனால் இப்போது விஷ்ணு கரந்தையும் சிவ கரந்தையும் வழிபாட்டில் முக்கியமாகக் கருதப்படுவதாகத் தெரியவில்லை. இந்த இரண்டு கரந்தையையும் சேர்த்தே கரந்தை என்ற பெயர் சங்க நூல்களில் வழங்கியதாகத் தெரிகின்றது. கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் பொழில் சிறப்பு மலர் இதழைக் கொண்டுவருவதால் கரந்தை என்புது பண்டைய தமிழ் நூல்களில் எது என்பதையே தெரிவிக்க இக் கட்டுரை எழுதப்பட்டது.

அறிவினுள் அறிவு

'மக்கட் பண்பு' குடிமக்களுக்கு வேண்டும் இன்றியமையாப் பண்பாகும். சமூக நல்லுறவு செழிக்க எல்லோர் மாட்டும் இனிய செவ்வியராதல் வேண்டும். அவரவர் இயல்பறிந்து அதற்கேற்ப ஒழுகுதல் வேண்டும். எவரையும் இகழ்தல் கூடாது. இதுவே அறிவினுள் அறிவு.

முனைவர் பா. நடராசன்

சிந்துவெளி எழுத்தும் கீழ்வாலை ஓவியமும்

[பேராசிரியர் இரா. மதிவாணன்]

தமிழ்நாட்டில் விழுப்புரத்திற்கு அருகிலுள்ள கீழ்வாலை என்னும் சிற்றூரில் 1982 ஆம் ஆண்டு வரலாற்றுக்கும் முற்பட்ட ஓவியங்களைப் புதுவை வரலாற்றுக் கழகத்தினர் கண்டுபிடித்தனர். பாகூர் புலவர் திரு. குப்புசாமியும், வில்லியனூர் புலவர் திரு. ந. வெங்கடேசனும், அனந்தபுரம் திரு. கோ. கிருட்டிணமூர்த்தியும் இந்தக் கண்டுபிடிப்புகளுக்குப் பெரிதும் துணைபுரிந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கீழ்வாலை பாறை ஓவியத்தில் 80 வரை படங்கள் உள்ளன என்றும் அவற்றின்கீழ் சிந்துவெளி எழுத்துகள் காணப்படுகின்றன என்றும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் களஞ்சிய மையத்துத் தலைமைப் பதிப்பாளரும் தலைசிறந்த ஆராய்ச்சியாளருமான திரு. பி. எல். சாமி அவர்கள் அரிய கட்டுரை ஒன்றினைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான The Tamil Civilization - June 1983 ஆங்கில இதழில் எழுதியிருக்கிறார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல், தமிழ் நாட்டில் சிந்துவெளி எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புக்குரியதாகும். அவ்வகையில் திரு பி. எல் சாமி அவர்களைப் பாராட்டிப் புகழ்வது மிகவும் தகுதியுடையதாகும். இந்தக் கண்டுபிடிப்பைத் தக்க வகையில் பரப்பும்பொருட்டு 'சேகர் பதிப்பகத்தார்', ''தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம்'' என்னும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டிருப்பது திரு பி. எல். சாமி அவர்களின் உழைப்பைத் தமிழகத்திற்கு எடுத்துக் காட்டியிருக்கிறது.

காலஞ்சென்ற தமிழ் மூதறிஞர் மொழி ஞாயிறு திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களோடு ஒருமுறை சிந்துவெளி எழுத்துகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது தமிழ் மொழியில் இலக்கணக் கட்டமைப்பையும் சொற்கட்டுச் சீர்மைகளையும் சொற்பிறப்பு நெறிமுறைகளையும் மனத்தில் கொண்டு, காலப்போக்கில் எழுத்தில் வரிவடிவங்கள் எப்படியெல்லாம் மாறக்கூடும் என்பதற்கு மொசபதோமியா, எகிப்து, சிந்துவெளி, சீனம், பிராமி, தமிழி போன்ற பலவற்றின் தொல் பழங்கால எழுத்து வடிவங்களையும் ஒப்புநோக்கி ஆராய்ந்தால் சிந்துவெளி எழுத்தைப் படிப்பது அரிதாக இராது என்றும் வேற்று மொழிச்சொல் கலவாத பழந்தமிழ்ச் சொல்லமைதிகளை ஊன்றி நுனித்தறிய வல்லவரும், தமிழ் வடிவங்களை முறையாக மீட்டமைக்க வல்லவரும் தமிழிலும், பிராகுவி, பஞ்சாபி போன்ற

மொழிகளிலும் பிறமொழிகளிலும் வழக்கிலுள்ள பழஞ்சொற்களை ஒப்பிட்டறியவும் வல்லவர் சிலர், சிந்துவெளி யெழுத்துகள் அத்தனையையும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு முறையாக ஆய்ந்தால், சிந்துவெளி எழுத்துகளை எளிதில் படித்து அறியலாம் என்று கூறியிருக்கிறார்.

இதை மனத்திலிருத்தி, தமிழ்மொழியின் கட்டமைப்பையும் சொற்பிறப்பு நெறிமுறைகளையும் கருத்திற்கொண்டு சிந்துவெளி எழுத்துகளைப் படிக்க முடியுமா என்று கடந்த ஓராண்டாக அவ்வப்பொழுது முயன்று வந்தேன். அதன் விளைவாகச் சிந்துவெளி எழுத்துகளை ஓரளவுக்குப் படிக்க முடிகிறது என்பதையும் இன்னும் ஆயிரக்கணக்கான சிந்துவெளி முத்திரைகளை ஒப்பிட்டு ஆய்வதன் மூலம் அனைத்து முத்திரைகளையும் படித்துவிட முடியும் என்றும் நம்புகிறேன்.


[1](ஓம்) வடிவம் :


சிந்துவெளி முதல் பல்வேறு இடங்களில் காணப்பட்ட எழுத்துச் சான்றுகளில்[2] (சுவஸ்திக்) எனப்படும் வடிவம் பரவலாகக் காணப்படுகிறது. இது, 'ஓம்' என்னும் தமிழ் எழுத்தேயன்றி வேறில்லை. கி. மு. இருநூற்றுண்டுக்கு முற்பட்ட தமிழ் எழுத்திலும் சிந்துவெளி எழுத்திலும் Z போன்ற அடையாளம் 'ஒ' என்னும் எழுத்தைக் குறிக்கும். இரண்டு ஒகரங்கள் இணைத்து எழுதப்பட்டால் அது ஓகார நெடிலைக் குறிக்கும். இதில் + குறி மகர மெய்யெழுத்தைக் குறிக்கும். ஆதலின், தொல் பழங்கால முதல் எல்லாவகை எழுத்துச் சான்றுகளிலும் இடம்பெற்றிருக்கும்[3] அடையாளம் 'ஓம்' என்னும் தமிழ்ச் சொல்லே என்பதை மிகவும் உறுதியாக வரையறுக்கலாம். சிந்துவெளி தொடர்பாக மிகத்தெளிவான முடிவுகளும், சிந்துவெளி எழுத்தை உறுதியாகவும் நிறைவாகவும் படிக்கக்கூடிய வாய்ப்புகளும் உருவாகிவிட்டன என்பதை இதன் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிந்துவெளி எழுத்து :

கீழ்வாலையிலுள்ள பாறை ஓவியத்தில் ஒரு படகில் நால்வர் நிற்பது போலவும் ஒருவர் துடுப்பு கையில் வைத்திருப்பது போலவும் ஓர் ஓவியம் காணப்படுகிறது. அதன்கீழ் நாவாய்த்தேவன்[4]

---

1. 2. 3. 

4. 

என்னும் சொல் சிந்துவெளி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் 'யகர' மெய்யெழுத்தும் 'தே' என்ற உயிர்மெய்யெழுத்தும் ஒன்ருக எழுதப்பட்டிருக்கிறது. இது, இந்த ஓவியம் வரைந்தவருடைய பெயராக இருக்கலாம். அல்லது கடல் தெய்வத்தையோ படகு ஓட்டுபவர்களின் தெய்வத்தையோ குறித்ததாகலாம். இந்தஎழுத்துகளை நான் எவ்வாறு படித்தேன் என்பதற்கான விளக்கம் Etymological approach to Indus Script - என்னும் ஆங்கிலக் கட்டுரையில் தெளிவாக வரைந்திருக்கிறேன். சிந்துவெளி எழுத்தை ஆராய்ந்த வர்களுள் அறிஞர் ஈராசு அடிகளாரும், பின்லாந்து அறிஞர் ஆசுகோ பரபோலாவும், உருசிய நாட்டு அறிஞர் நார்சோவும் சிந்து வெளி மொழி, ஐயமில்லாமல் பழந் திரவிட மொழியே என்று நிறுவியுள்ளனர்.

அவர்கள் முடிவு உண்மை என்பதற்கும், சிந்துவெளி எழுத்துகள், குமரி முனையிலிருந்து சிந்துவெளி வரை பரவியிருந்தது என்பதற்கும் கீழ்வாலைப்பாறை ஓவியமும் சிந்துவெளி எழுத்தும் அருமையான சான்றுகளாக விளங்குகின்றன. சிந்துவெளி எழுத்து களில் 'சாத்தன்', 'ஆய்', 'உதியன்' போன்ற அருமையான தமிழ்ச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. தமிழில் வழக்கழிந்து சிந்துவெளியில் மட்டும் வழங்குகின்ற தமிழ்ச் சொற்களும் சில காணப்படுகின்றன. உன்னன் (மேலோன், சிறந்தவன்) என்னும் சொல் அவற்றுள் ஒன்று. மலையாளத்தில் செல்லக் குழந்தையை ''உண்ணி'' என்று அழைப்பதை இதனோடு ஒப்பிட்டுக் காணலாம். சிந்துவெளி மொழியில் தலைவன் என்ற பொருளில் 'இயா' என்னும் சொல் காணப்படுகிறது. தமிழில் 'இயவுள்' என்ற சொல்லுக்கு 'கடவுள்' என்றும் 'தலைவன்' என்றும் பொருள். இதே சொல் பஞ்சாபி மொழியில் தந்தையைக் குறிப்பதாக வழங்கி வருகிறது. பஞ்சாபி மொழியில் பெரியப்பாவை 'தாஇஆ' என்று வழங்கு கின்றனர். பழந்தமிழில் 'தா' என்னும் சொல்லுக்கு வலிமை என்றும் பெருமை என்றும் பொருள் உள்ளது. ஆதலின், தாஇயா என்பது பெரிய தந்தையைக் குறிக்கும் அழகான செந்தமிழ்ச் சொல். தமிழ்நாட்டின் தொல்பழங்காலத் தமிழ்ச் சொற்களும் சிந்துவெளிக்கே உரிய சொல்லாட்சிகளாக வழங்கி வந்திருக்கின்றன என்பதற்கு இவை சான்ருகும். 'அச்சன்' என்ற சொல்லும் சிந்துவெளி முத் திரையில் மிகுதியாகக் காணப்படுகிறது.

சிந்துவெளி எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும் :

உலகில் எம்மொழியிலும் தொடக்க காலத்தில் பட எழுத்தும் அதன்பின் சுருக்கெழுத்தும் தோன்றியபின், கல்வி வளர்ச்சி, நாகரிக வளர்ச்சிகளின் கட்டாயத்தாலும் ஒரு செய்தியை மற்ருெருவருக்குத்

தெரிவித்தாகவேண்டிய அரசியல் வணிகச் சூழ்நிலைகளின் உந்துதலாலும் ஒவ்வோர் உயிரொலிக்கும் மெய்யொலிக்கும் தனித்தனி எழுத்துகள் எழுதவேண்டிய நிலை ஏற்படும். தனித்தனி எழுத்து, ஒலியனாக (Phonemic) ஏற்பட்ட பிறகு, அம் மொழியிலுள்ள ஒலிப்புகள் அத்தனையையும் அடக்கும் வரிவடிவம் எண்ணிக்கையில் மேலும் பெருக வாய்ப்பில்லை. வேற்றுமொழி தாக்குதலால் தாய் மொழியல்லாத வேறெழுத்துகளைக் குறிக்க அவ் வேற்றுமொழியினர் எவ்வகையிலேனும் தாய் மொழியினரை மொழியாளும் முறையில் மேலாதிக்கம் செலுத்த நேர்ந்திருந்தால் - வேற்றுமொழி எழுத்துகளின் புதிய வரிவடிவங்கள் ஒருசில தாய்மொழியில் சேரும். தமிழில் ஐ, ஷ, ஹ போன்றவை செயற்கையாகப் புகுத்தப்பட்டிருப்பதை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

தமிழ்மொழியில் உயிரும் மெய்யுமாக முப்பது எழுத்துகள் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. புதிய ஒலிப்புகள் காலப் போக்கில் ஏற்பட்டால் அவை சார்பெழுத்தாகக் கொள்ளப்பட்டன என்பதற்குத் தொல்காப்பிய நூற்பாக்கள் வலிய அரணாகின்றன.

தலைமுறை தலைமுறையாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதற்கு ''நூன் மரபு'' என்ற தலைப்பின்கீழ் இதனைத் தொல்காப்பியர் வலியுறுத்துவதனின்றும் தெரிகிறது.

தொல்காப்பியர் காலத்திற்கு முந்திய சிந்துவெளி தமிழில் முப்பது முதலெழுத்துகள் எண்ணிக்கையில் குறைந்திருக்கலாமே ஒழிய மிகுந்திருக்க வாய்ப்பில்லை.

ஓர் எழுத்துக்குப் பல குறியீடுகள் :

எழுத்துகளின் எண்ணிக்கை (இயல்பான நிலையில்—வேற்றுமொழி கலப்பில்லாத நிலையில்) கூடுவதில்லை என்பது உண்மையாயினும், எழுதுபவரின் கைப்பாங்கு, காலப்போக்கிலும் இடந்தோறும் ஏற்படும் திரிபு, கலையுணர்ச்சியுடன் எழுத்துகளுக்கு ஒருசிலர் செய்யும் ஒப்பனை, கிளைமொழிகளில் தோன்றும் புதிய ஒலிப்புத் திரிபுகள் ஆகியவற்றுக்கேற்ப எழுத்துகளின் வரிவடிவம் வேறுபடுகின்றது. பல்லவர்கால மாமல்லபுரத்துக் கல்வெட்டொன்றில் அகர உயிரெழுத்து நான்கு வகையாக எழுதப்பட்டிருக்கிறது. சிந்துவெளி நாகரிகக் காலம் வரலாற்றுக்கு எட்டிய அளவில் 3000 ஆண்டுகள் நீடித்திருக்கிறது.

(தொடரும்)

செய்திகள்

இராசு செட்டியார் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா

திருக்குறள் ஆராய்ச்சி வல்லுநர் உயர்திரு எஸ். இராசு செட்டியார் அவர்களின் 80ஆம் ஆண்டு நிறைவு விழா அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் 27–5–84 அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் அவர்கள் தலைமை ஏற்றார். செட்டியார் அவர்களின் பணிகளைப் பாராட்டி, டாக்டர் ஔவை நடராசனார், சிலம்பொலி செல்லப்பனார், இரா. மதிவாணனார், பேராசிரியர் கு. சிவமணி, சட்டமொழி ஆணைய உறுப்பினர் கா. பாலசுப்பிரமணியனார், திருக்குறளார் வீ முனுசாமி ஆகியோர் சொற்பெருக்காற்றினர். விழாவில் திருக்குறளார் அவர்களால் இராசு செட்டியார் அவர்களுக்குத் "திருக்குறட் செம்மல்" என்னும் பட்டம் வழங்கப்பெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன் விழா

சென்னை, வியாசர்பாடி மாக்கவி பாரதி நகர் "தமிழ் இலக்கிய உறவின்" சார்பில் 19—5—84 அன்று "பாவேந்தர் பாரதிதாசன் விழா" சீருஞ் சிறப்புமாகக் கொண்டாடப் பெற்றது. விழாவிற்கு முனைவர் கவிஞர் ஏர்வாடி எஸ். இராதா கிருட்டிணன் அவர்கள் தலைமை ஏற்றார். முனைவர் கவிஞர் த. கோவேந்தன், தமிழறிஞர்கள் த. பரமசிவம், தி. அமிர்தலிங்கம், வி. விட்ணுகுமார், ஆகியோர் உரையாற்றினர். பொறியியல் அறிஞர் எஸ். எஸ். பெருமாள் அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

பாம்பன் அடிகள் குருபூசை விழா

பாம்பன் குமரகுருதாச அடிகளின் 55ஆவது குருபூசை விழா மேத்திங்கள் 20, 21ஆம் நாள்களில் அடிகளின் மெய்யன்பர்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. 20—5—84இல் அடிகளின் சமாதிக் கோயிலுக்கு, பால்குடப் பவனி வந்து சேர, சிறப்புத் திருமுழுக்குகள் நடைபெற்றன. நள்ளிரவில் ஆறு கால வழிபாடுகளும் நடைபெற்றன. 21—5—84இல் அறிஞர் பலர் சொற்பொழிவாற்றியபின் அடியார்கட்கு அன்னம் பாலித்தலும் மகேசுவர வழிபாடும் நடைபெற்றபின் விழா இனிது நிறைவேறிற்று.

முனைவர் பா. நடராசன் மறைவு

கழக நூலாசிரியருள் ஒருவரும், கன்னியா குமரி மாவட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், பொருளியல் வல்லுநரும், சிறந்த

எழுத்தாளருமான முனைவர் பா. நடராசன் அவர்கள், 14—5—84 இல், சென்னையில் தமது 74ஆம் அகவையில் காலமானார்கள் என்ற செய்தி அறிந்து வருந்துகிறோம்.

திரு நடராசன் அவர்கள் கழகத்தோடு நீண்ட நாள் தொடர்புடையவர். கழக மலர்களில் திருவள்ளுவர் கூறும் பொருளியல் கருத்துகளை விளக்கி எழுதியுள்ள கட்டுரைகள் பாராட்டுக்குரியவை. இவர் எழுதிக் கழகவழி வெளிவந்துள்ள 'இந்தியப் பொருளியல்' ஓர் அரிய படைப்பாகும். இவர் சில காலம் தமிழக அரசின் திட்டக் குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். மறைந்த நடராசன் அவர்கள் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நக்கீரர் கழகக் காப்பாளர் திரு. சி. நடராசன் மறைவு

நக்கீரர் கழகக் காப்பாளரும் ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜன சபைத் தலைவருமான உயர்திரு. சி. நடராசன், பி.ஏ., பி.எல். அவர்கள் 18—4—84 புதன் கிழமையன்று காலமானார்கள். திரு. நடராசன் அவர்கள் வழக்கறிஞராக மட்டுமின்றி, சிறந்த தமிழ்ப்பற்றாளராகவும் இருந்தார். திரு. வி. க., சுவாமி உருத்திரகோடீசுவரர், காஞ்சி நாகலிங்க முனிவர் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர். அத்துடன் நக்கீரர் கழகத்தின் காப்பாளராக இருந்தும் இவர் ஆற்றிய நற்பணிகள் பல. இவரது முயற்சியால் திரு. வி. க. நூற்றாண்டு விழா மலர் சிறப்பாக வெளிவந்துள்ளது. 'செங்குந்த மித்திரன்' இதழ் நடைபெறப் பெருந்துணை புரிந்தவர். முருகப் பற்றாளர். இத்தகைய பெருமகனாரின் இழப்பு சமயத்திற்கும் மொழிக்கும் பேரிழப்பாகும். இவர்தம் குடும்பத்திற்கு நக்கீரர் கழகத்தார் தம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ௫அ, ௬௭௭ ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
சயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
திரு. A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5	00
ஆரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5	00
கல்லை தே. கண்ணன் அவர்கள்	5	00

மதிப்புரை

தமிழ் நூறு

[ஆசிரியர் : புலவர். இரா. இளங்குமரனுர், பாவாணர் ஆராய்ச்சி நூலகம், திருநகர், மதுரை-6 விலை : உரூ. 3-00.]

தமிழ் நூறு என்னும் பெயரினை உடைய இந்நூல், கழக இலக்கியச் செம்மல், புலவர், இரா. இளங்குமரன் அவர்களால் யாக்கப் பெற்றுளது. நூல் முழுவதும், அறுசீர் மண்டலப் பாவால் அமைந்துள்ளது. நூல் முழுவதும் நின்ற பாவின் இறுதி, வரும்பாவின் முதலாக அமையுமாறு பாடப்பெற்றுளது. இவ்வாறு பாடப்படுவதை அந்தாதித் தொடை என்பர்.

இந்நூல், பாக்களின் அளவாற் சுருங்கியதாயினும், பொருண் மாண்பான் விரிந்த இயல்பினதாம். இந் நூலாசிரியர் ஆழ்ந்தகன்ற புலமையும், நுண்மாண் நுழைபுலமும், பல்துறைப்பட்ட பன்னூலறிவும் சான்றவராதலின், பாக்கள் முழுவதும் செம்பொருள் பயப்பனவாகவும், சொற்செறிவும், பொருட்செறிவும் உடையனவாகவும், கற்போரைத் தங்கண் ஆழ்த்தி உளமொன்றச் செய்யும் இயல்பினவாகவும் அமைந்துள்ளன. இளங்கோ அடிகளாரின் பாவினிமையும், கம்பனின் கவிதை நயமும், பாவேந்தரின் பாக்களுடைய எழுச்சியும், வீறும், சுவையும் இப் பாக்களில் மிளிர்கின்றன.

தமிழ் வாழ்த்தின் முதற் செய்யுள் தமிழே உலகு, உலகே தமிழ் என்னும் பேருண்மையை உணர்த்தி நிற்கின்றது. அதன்கண், "மூலச் சொல்லாய் முகிழ்த்தோங்கும் முன்னைத் தமிழ்" என்னும் ஈற்றடி, தமிழ் உலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழி என்பதையும், அதுவே உலக மொழிகளுக்கெல்லாம் மூத்தமொழி என்பதையும் இனிது விளக்கி நிற்கின்றது. "இம் மாநிலத்தின் மொழிக்கெல்லாம் இனிய முதலே" (3) எனவும், "மும்மைத் துணையாய் முதலானாய் மூத்த தமிழே" (16) எனவும். "ஒன்றே உலக மொழி யென்றே ஒன்றும் அறிஞர் உரைக்கின்றார்" (19) எனவும் வருவன தமிழின் தொன்மையையே மீண்டும் எடுத்துரைப்பனவாம்.

தமிழ்ப் பகைவர்கள் அதனை அழிக்கச் சூழினும், அழியாமல் என்றுமுள தென்றமிழாய் நிவந்தோங்கும் இயல்பினது என்பதைத் "துளக்க அசையா மலையம்நீ" (10) எனத் துணிந்தோதுகின்றார்.

தமிழ்தரும் இன்பம் பிறிதொன்றற்கில்லை என்பதை, "மேலைப் பழமைத் தமிழன்னை மேவும் பேற்றிற் கிணையுண்டே?" (28) என அதன் இன்பப் பெருக்கினை எடுத்தியம்புகின்றார். புதினம் புனைவோரால் தமிழுக்கு நேருந் தீமையைக், "கொன்று குமைப்பதெனவுன்னைக் குத்திக் குடைந்து குழிப்புண்ணாய், என்றும் மாறா வடுவாக்கி எழுதுகின்றார்: "இக்கயமைப், பொன்றித் தொலைய வழியென்னே" (50) எனப் பாடி மனம்புழுங்குகின்றார். தமிழ்பற்றியோ அதன் ஆக்கம் பற்றியோ சிந்தனை இன்றி, உண்டுடுத்து வாழ்தலையே குறிக்கோளாகக் கொண்ட மக்கள் பெருவாரியாக உள்ள இக்காலத்து, இத்தகையதொரு நூல் வெளிவந்தமை வரவேற்கத்தக்க தொன்றும்.

புலவர் பா. நாராயணன்

ஆத்தூர்

மர வழிபாடு—திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு

[ஆசிரியர்: டாக்டர் க. ப. அறவாணன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., தமிழ்த்துறைத் தலைவர், இலயோலா கல்லூரி, சென்னை-34, பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600 108, பக்கங்கள் 128, விலை: உரு. 12-00.]

தமிழகத்தில் ஆங்காங்கே அரச மரங்களும் வேப்ப மரங்களும் வழிபாட்டுக்குரிய தெய்வங்களாக மதிக்கப்பட்டு வருகின்றன. அதுபோலவே, பல வீடுகளில் துளசி மேடைகள் காணப்படுகின்றன. நம் தாய்மார்கள் அரச மரங்களைச் சுற்றுதலும், அரசுக்கும் வேம்பிற்கும் திருமணம் செய்து காண்டலும் வழக்கமாக இருக்கின்றன. இத்தகைய மர வழிபாடு இங்கு மட்டுமன்று, ஆப்பிரிக்காவிலும், உலகின் வேறு சில பகுதிகளிலும் ஆங்காங்குள்ள வெவ்வேறு மரங்கள் கடவுள்களாக மதிக்கப்பட்டும் வழிபடப்பட்டும் வருகின்றன. உலக மக்களிடையே இப்படி மரங்களைத் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கம் ஏற்பட அடிப்படைக் காரணங்கள் யாவை. இவ் வழிபாடுகள் எப்போது எப்படித் தோன்றி எப்படியெல்லாம் வளர்ந்துள்ளன என்பன பற்றித் தக்க ஆதாரங்களுடன் ஆராய்ந்து கூறுகிறது இந்நூல். இது மர வழிபாடு மட்டுமன்று; இறை வழிபாடே எப்படித் தோன்றியிருக்கக் கூடும் என்பதற்கும் விளக்கம் தரும் நூலாக அமைந்துள்ளது. ஆசிரியரின் ஆராய்ச்சித் திறம் வியந்து பாராட்டத்தக்கது. திராவிட ஆப்பிரிக்க ஒப்பீட்டு வரிசையில் இஃது ஒன்பதாவது நூலாகும். ஆசிரியரின் இத்தகைய ஆராய்ச்சிகள் மேலும் பெருக வாழ்த்துகிறோம்.

இலக்கண வரலாறு:

பாட்டியல் நூல்கள்

[ஆசிரியர்: மருதூர் அரங்கராசன், எம்.ஏ., பிஎச்.டி., எம். எச். இடி., எம். பில். எம்.இடி. டி.எஸ்.எம்., டிப். சமக்கிருதம். பால முருகன் பதிப்பகம், மருதூர் அஞ்சல், உடையார் பாளையம் வட்டம், திருச்சி மாவட்டம், 621710, பக்கங்கள் 456, விலை: உரு. 36.]

தொட்டனைத் தூறும் மணற்கேணி போன்றது தமிழ் இலக்கண வரலாறு. தோன்றிய இலக்கண நூல்கள் அனைத்தும் நமக்குக் கிடைத்தில. இந்திர காளியம், அவிநயம் போன்ற நூல்கள் மேற்கோள் நூல்களாகவன்றி முழு உருவமும் தெரியாமல் மறைந்து போனவை. இன்று முழுமையாகக் கிடைத்திருப்பவை பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் இன்ன பிற. இப் பாட்டியல் நூல்கள் தோன்றிய காலம், நூலின் இயல்பு, ஆசிரியர், உரையாசிரியர்கள், இன்னபிற செய்திகளை விளக்கமாகக் கூறுகிறது இந் நூல். நூலாராய்ச்சி செய்வோர்க்குப் பயன்படத்தக்க சிறந்த இலக்கண வரலாறு இஃதெனில் மிகையன்று. ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

தனித்தமிழ் வளர்ச்சி

[தொகுப்பாசிரியர்: க. தமிழ் மல்லன், க.இ., கல். இ., தனித்தமிழ்க் கழகம், 168, மாரியம்மன் கோயில் தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-605009, விலை: உரு. 8-00.]

தனித்தமிழ் வளர்கிறது—வாழ்கிறது என்பது உண்மை. ஆனால், வளர வேண்டிய அளவுக்கு வளரவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். எனினும் அறிஞர் சிலர் முனைப்போடிருந்து தனித்தமிழ் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தி வருகின்றனர். அவர்களுள் புதுவை தனித்தமிழ்க் கழகத் தலைவர் உயர்திரு க. தமிழ் மல்லன் அவர்களும் ஒருவராவர். இவர்தம் முயற்சியால் கடந்த இரண்டாண்டுகளில் நடைபெற்ற ஆய்வரங்கங்களில் வழங்கப்பட்ட கட்டுரைகளின் ஒரு பகுதிதான் 'தனித்தமிழ் வளர்ச்சி' என்னுந் தனி நூலாக வெளிவந்துள்ளது. இதில் தனித்தமிழ்ப் புதினங்கள், பாவாணரின் புதுச் சொல்லாக்கம், நீலாம்பிகை அம்மையாரின் தனித்தமிழ்ப் பணி. தமிழ்ச்சுடரின் தனித்தமிழ்த் தொண்டு. தனித்தமிழில் சிறுகதைகள், தனித்தமிழில் குழந்தை இலக்கியம் என்னும் ஆறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அனைத்துக் கட்டுரைகளும் தனித்தமிழ்ப் பற்றுளர்களால் எழுதப்பெற்று, தனித்தமிழ் மணங்கமழ்கின்றனவாய் அமைந்திருப்பது பாராட்டத்தக்கது.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம் சாலை, சென்னை-108. அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிட்.